DEEPAM .news

தீபம்

கனடாப் பதிப்பு
தமிழின் முதல்தர
வார இதழ் • தீபம் 48 • 26.10.2016

யாழ் பல்கலைக்கழக மாணவர் படுகொலை:

கலவர நிலையை உருவாக்குவதற்கான ஒரு திட்டமிட்ட தாக்குதலா?



விழித்திருப்போம்!

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சம்பவம், பொலிஸ் தரப்பில் இவ்வளவு பாரிய நெருக்கடியை தோற்றுவிக்கும் என்று அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். கொத்துக் கொத்தாக மக்களைக் குண்டு போட்டுக் கொன்றபோதும் சரி,அள்ளுகொள்ளையாக இளைஞர்கள் கேள்வி முறையின்றி பிடித்துச் செல்லப்பட்ட போதும் சரி வெறும் ஒப்பாரியை மட்டும் வைத்துக்கொண்டிருந்த மக்களுக்கு ஆதரவாக தெருநாய்களைத் தவிர வேறு யாரும் உரத்துக் குரலெழுப்பி அவர்கள் கண்டதில்லை. வடக்குக் கிழக்குக்கு வெளியே அதை ஒரு செய்தியாகக் கூடப் பகிர்ந்ததில்லை. தமிழர்களை சுடுவதற்காக பொலிசோ இராணுவமோ எந்தக் காரணத்தையும் யாருக்கும் சொல்ல வேண்டியதில்லை. இராணுவத்துக்கும் பொலிஸுக்கும் தமிழ் மக்கள் தொடர்பாக எத்தகைய கடப்பாடும் இல்லை அவர்கள் மிரட்டி வைக்கப்பட வேண்டியவர்கள என்பதை தவிர.

அவசர காலச் சட்டம், ஊரடங்குச் சட்டம் என்பன நிலவுகின்ற நேரங்களில் கூட பொலிசாருக்கு துப்பாக்கியைப் பாவிக்க விசேட அனுமதி தேவை. வாகன ஓட்டுனர்கள் பொலிசார் மறிக்கும் போது நிறுத்தாமல் போவதற்கு பல காரணங்கள் இருக்கலாம். இவற்றில் பல வெறும் சிவில் குற்றங்கள் சார்ந்த காணங்களாக இருக்க வாய்ப்புண்டு. சாரதி அனுமதிப் பத்திரமில்லாமல் போதல், வாகன உறுதிப் பத்திரமோ காப்புறுதியோ இல்லாமல் போதல், குடித்து விட்டு வாகனம் செலுத்துதல்,களவு அல்லது வேறு குற்றங்களை செய்துவிட்டு ஓடுதல் என்று பல காரணங்கள் இருக்கலாம்.இவை எவற்றுக்காகவும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய பொலிசாருக்கு எந்த அதிகாரமும் இல்லை. ஆனால் இவையெல்லாம் நடக்கின்றன. காரணம் ஒன்றும் புதியதல்ல. நடக்கும் இடம் தமிழ் பிரதேசம். அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப் படுபவர்கள் தமிழ் மக்கள் அல்லது சிறு பான்மையினர். ஆகவே அந்தப் பிரதேசங்களில் செய்பவைக்கு பொறுப்புக் கூறுவதோ, சட்டம் பற்றிச் சிந்திப்பதோ அவசியமில்லை என்பவைதான் இதற்கான காரணங்கள்.

ஆனால், நிலமை எதிர்பாராத விதமாக பெரிய விடயமாகி விடும் என்றவுடன், அதை எப்பாடுபட்டாவது மறைக்கப் பார்த்தனர். சம்பவம் நடந்த செய்தி பரவும் பொழுதே இதற்கும் பொலிசுக்கும் சம்பந்தமில்லை என்ற இப்போதைய பாதுகாப்பு செயலாளரின் கருத்தும் சேர்ந்தே பரவியது. ஆனால் உண்மை விரைவிலேயே வெளிச்சத்துக்கு வந்ததும் நிலமையை சமாளிக்கும் உத்திக்கு இறங்கினர். ஜனாதிபதி தலையிட்டு நடவடிக்கை எடுப்பதை துரிதப்படுத்தும் அளவுக்கு நிலமை சென்றுவிட்டதால் இப்போது எப்படி இதிலிருந்து மீழ்வது என்ற பிரச்சினை மட்டுமே பிரதானமாகிவிட்டுள்ளது.

மாணவர்களின் ஆர்ப்பாட்டப் போராட்டம் தவிர்க்கமுடியாமல் விசாரணையை துரிதப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கி விட்டுள்ளது.

ஆயினும், இந்த நிலையிலிருந்து அடுத்த கட்டம் பாதிக்கப்பட்டவர்கள் விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்கப்படுதல் என்று வரும்போது, அது இழுபட்டு இழுபட்டு ஒன்றுமில்லாமல் போய்விடும் நிலமை தான் இங்கு தொடர்ந்து நடைமுறையில் இருப்பதால் இதற்கு மேல் அதிகமாக எதையும் எதிர் பார்க்க முடியாது.அவர்களுக்கெதிரான வழக்கு யாழ்ப்பாணத்திலிருந்து வேறு பிரதேசத்துக்கு மாற்றப்படும். பிறகு அது நீண்டகால மாக இழுபட்டபின் குமாரபுரம் கொலையின் தீர்ப்புப் போல முடித்து வைக்கப்படும்.

இந்த இடத்தில் தான் அரசியல் வாதிகள் மடுமல்ல, சமூக இயக்கங்களும் மிகவும் விழிப்பாக இருந்து நியாயமான தீர்வுக்காக தொடர்ந்து போராட வேண்டும். யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆதரவாக அனைத்து பல்கலைக்கழக மாணவர்களும் ஒன்றிணைந்தது போல சிவில் அமைப்புக்களும் செயலில் இறங்க வேண்டும்.

பழிக்குப் பழி போன்ற நடவடிக்கைகளுக்குப் பதில் நியாயத்துக்கான போராட்டத்துக்கு குரலெழுப்பும் சக்திகளை ஒன்றிணைப்பது அவசியம். எழுக தமிழ் நிகழ்ச்சியில் தீவிரமாக இறங்கியவர்கள் கூட இதுபோன்ற விடயங்களுக்கு வெறும் கண்டன அறிக்கையுடன் நின்று விடுவது நல்லதல்ல.

மக்கள் அணியாகத் திரள்வதும், விட்டுக் கொடுக்காத போராட்டத்தில் தொடர்ச்சியாக ஈடுபடுவதன் மூலமே நிலமை எல்லை மீறிப் போகாதிருக்கவும், நமது கோரிக்கைகளை வென்றெடுக்கவும் முடியும்.


நடந்த படுகொலைகள் தற்செயலானவை அல்ல. திட்டமிட்ட படுகொலைகள். வடக்குக் கிழக்கில் மீண்டும் ஒரு இரத்தக் களரியை உருவாக்கும் நோக்குடனான நடவடிக்கைகள்.இவை வெறும் கண்டனத்துக்கு மட்டும் உரியவை அல்ல. தொடர்ச்சியான எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் எதிர் கொள்ளப்பட வேண்டியவை.

நாம் விழித்திருப்போம். விழிப்புடன்செயற்படுவோம் என்பதே மக்கள் போராட்டத்தின் பலத்துக்கான அடிப்படை

அநியாயமாக கொல்லப்பட்ட இந்த இரு இளைஞர்களுக்கும் தனது ஆழ்ந்த அஞ்சலியை தெரிவிப்பதோடு, நியாயத்துக்கான எம்மக்களின் போராட்டங்களுடன் நேசக்கரம் நீட்டி இணைந்து கொள்கிறது.

Deepam Canada
3-2094 Lawrence Ave.E
Toronto on M1R 2Z6 Canada
416.240.9727
info@deepam.news editor@deepam.news www.deepam.news

நீதிமன்றத்தில் வைத்து கழுத்தை வெட்டிய பாடசாலை ஆசிரியர்!



குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் நீதி மன்றில் வைத்தே திடீரென சவரக் கத்தியினால் தனது கழுத்தை வெட்டிய திடுக்கிடும் சம்பவம் ஒன்று அண்மையில் நடந்தது.,

இந்தச் சம்பவம் நடந்தது தாமுரிக்காவில், கலிபோனியாவில். பாலியல் வல்லுறவு தொடர்பாக நடந்த வழக்கொன்றின் விசாரனையில் குற்றவாளியாக கருதப்பட்ட ஜெஃப்றி ஸ்கொட் ஜோன்ஸ் (56) ஒரு உயர்நிலைப் பள்ளி ஆசிரியர். 2012 2013 காலப்பகுதியில் அவரது காதலியின் உறவினரான ஒரு பதின்ம வயது பெண்ணுடன் பாலியல் உறவு வைத்திருந்தார் என்ற குர்றச்சாட்டின்மீது இவருக்கெதிராக வழக்குத் தொடரப்பட்டது. வழக்கின் விசாரணைக்குப் பின்னர், குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கி, அதன் பின் யூரிகளின் முடிவுக்கு அனுமதிக்கவா என நீதிமன்றம் கேட்டது. ஆயினும் பாதிக்கப்பட்டவர் தரப்பு சட்டத்தரணிகள் இதை உறுதியாக மறுத்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் தான் அவர் திடீரென சவரக்கத்தியை எடுத்து தனது கழுத்தை வெட்டிக்கொண்டார்.

உடனடியாக அங்கிருந்து வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர் சிகிச்சியின் பின் குணமாகியுள்ளார்..

எவ்வாறாயினும், அவரது வழக்கு பின்னர் யூரிகளின் முடிவுக்கு விடப்பட்டது. ஆயினும், அவர்கள் இரண்டு மணிநேர ஆலோசனைக்குப் பிறகு, அவரது தொடர்ச்சியான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பாலியல் வன்முறைகள் காரணமாக, குர்றவாளி என முடிவு செய்ததனர். இந்தக் குற்றத்துக்காக அவருக்கு 66 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.!



ஆண்பிள்ளைகள் பெண்பிள்ளைகளின் சட்டையை அணியக் கூடாது!

அல்பேட்டாவில் அண்மையில் இரண்டு குடும்ப நீதிமன்றங்களில் நடந்த வழக்கு களைத் தொடர்ந்து, 'பால்நிலை அடையாளம் என்றால் என்ன என்பதை புரிந்துகொள்ளும் விதத்தில் நீதிபதிகள் கல்வியூட்டப்பட வேண்டும்' என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார் பாலியற் சிறுபான்மையினர் தொடர்பான நிபுணர் ஒருவர்.

இந்த நீதிமன்றத்துக்கு வந்த வழக்கும், வழங்கப்பட்ட தீர்ப்பும் விசித்திரமானவை.. வழங்கப்பட்ட தீர்ப்பு இதுதான்: ஒரு பிள்ளை ஆண்பிள்ளையாகப் பிறந்தால், அது பகிரங்கமாக பெண்பிள்ளைகளின் ஆடைகளை அணியக் கூடாது.

அல்பேட்டாவிலுள்ள மெடிசின் ஹற் என்ற நகரத்திலுள்ள ஒரு குடும்பத்தின் 5 வயது மகன் தொடர்பாக இந்த வழக்கு வந்தது. அந்த மகன் தன்னை பெண்ணாக அடையாளப்படுத் தவும், பெண் பிள்ளைகளின் ஆடைகளை அணியவும் விரும்புவதை அவனது தாயார் ஆதரித்தார். ஆனால் தகப்பன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. தாயார் தான் பிள்ளைக்கு பால் தொடர்பான மயக்கம் ஏற்படக் காரணமாக இருக்கிறார் என்பது அவரது வாதம். இதனால் இருவருக்குமிடையில் ஏற்பட்ட தகராறு அவர்களை நீதிமன்றத்தை நாடச் செய்தது.


கடந்த ஆண்டு இந்த வழக்கை விசாரித்த நீதிபதி இப்படி ஒரு தீர்ப்ப வழங்கினார்: பிள்ளை விரும்பினால், பெண் குழந்தைகளுடைய ஆடை களை தனிப்பட்ட ரீதியில் மட்டும் அணியலாம். அதாவது அதை அணிந்து கொண்டு வெளியில் செல்ல முடியாது.

ஆனால் தாயார் விடவில்லை. மேன்முறை யீடு செய்தார். அங்கும் இந்த முடிவு உறுதி செய்யப்பட்டது. ஆனால், இப்போது மூன்றாவ தாக இந்த வழக்கை விசரித்த நீதிபதி, முன்னய தீர்ப்புக்களை ரத்துச் செய்ததுடன், பிள்ளை தனக்கு விருப்பமான உடையை அணியலாம் என்று தீர்ப்பு வழங்கியுள்ளார்.

"கனடாவில் பாலியல் சிறுபான்மை தொடர் பான சட்டங்கள் எப்போதோ மாறிவிட்ட பிறகும் இப்படியான தீர்ப்புக்கள் வந்துகொண்டிருக்க முடியாது. ஆயினும் இப்படியான தீர்ப் புக்கள் வழங்கப்பட்டுக்கொண்டு தான் இருக்கின் றன. இத்தகைய. போக்குக்கள் கேள்விக்குட்படுத் தப்பட்டு திருத்தப்பட வேண்டியவை" என்று தெரிவிக்கிறார் அல்பேட்டா பல்கலைக் கழகத்தின், பாலியற் சிறுபான்மயினர் தொடர் பான கற்கைக்கான கல்வி நிலையத்தைச் சேர்ந்த க்றிஸ் வெல்ஸ். அந்தத் தாயருக்கு உதவியளித்து வரும் க்றிஸ், அவரது குடும்பத்தை அடையாளம் காட்ட விரும்பவில்லை என்று தெரிவித்தார்.

'அல்பேட்டவின் நீதித்துறை இந்த விடயங் களைக் கவனத்தில் கொண்டு பால் நிலை அடையாளம் தொடர்பான அறிவார்ந்த தன்மை கொண்டதாயும் பால்நிலை சார்ந்த சிக்கல்களை உள்ளடக்கியதாகவும் அமைய வேண்டும்' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

ஓ! கனடா...



காலத்தின் (அலங்) கோலம்!.

- அபிஷ்டு

வில்லியம் பெயிற்றோன் ஹப்பார்ட் (William Peyton Hubbard) என்பவரைக் கனடாவில் பலருக்குத் தெரியாது. 1890 ஆம் ஆண்டு, தொறொன்ரோ மாநகரசபைக்குத் தேர்தலில் வெற்றிபெற்றுத் தெரிவான முதலாவது கறுப்பினத்தவர் ஹப்பர்ட். கனடாவின் எல்லா மாநிலங்களையும் இணைத்துக் 'கனடா' வை உருவாக்கியதாகச் சிறப்பிக்கப்படும் ஜோர்ஜ் பிரௌனின் வாகன ஓட்டுனராக இருந்தவர் ஹப்பர்ட்.

1837 இல் அமெரிக்காவின் அடிமை உடைமை முறைமையிலிருந்து தப்பிக் கனடாவுக்குத் தன் பெற்றோருடன் ஓடி வந்தவர் ஹப்பர்ட். 1893 1913 காலப்பகுதியில் தொரன்ரோ மாநகரசபையில் உறுப்பினராகக் கடமையாற்றினார். மிகுந்த பேச்சு வன்மை உடையவர். மாநகரசபையின் Board of Control என வழங்கப்படும் மிக முக்கியமான கட்டமைப்பின் இணைத் தலைவர்களில் ஒருவராகப் பணிபுரிந்தவர். ஹப்பர்ட்டின் மிகவும் முக்கியமான மக்கள் நலன் சார்ந்த பங்களிப்புக்களில் ஒன்று, நீர் வழங்கல், மின்சாரம் என்பவற்றைத் தனியார்மயமாக்க விடாமல் பேணியமையாகும். இவை பொதுமக்கள் நலன் சார்ந்தவை; எனவே பொதுமக்களின் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும் என்பது அவருடைய நியாயமான வாதம். எனினும் அவருடைய பெயரையும் பங்களிப்பையும் பெரும்பாலானோர் மறந்து விட்டனர். சென்ற வாரம் ஹப்பர்ட் நினைவாகத் தொரொன்ரோவிலுள்ள பூங்கா ஒன்றுக்கு அவருடைய பெயர் சூட்டும் விழா இடம்பெற்றது. அவரை நினைவு கொள்கிற காலத்தில் Toronto Hydro வைத் தனியார் வசம் வீசி விட நமது மேயர் ஜோன் ரோறி முடிவெடுத்துள்ளது காலத்தின் (அலங்) கோலம்.

கனடாவை நிராகரித்தது பெல்ஜியம்

மக்கள் தொகை குறைவாக இருந்தாலும் ஐரோப்பாவில் பல நாடுகளில் சிறு சிறு தேசிய இனங்கள் பல மாநில சுயாட்சியுடன் இருக்கின்றன. இந்தத் தேசிய இனங்களின் ஒப்புதல் இல்லாமல் மத்திய அரசுகள் வெளிநாட்டு ஒப்பந்தங்கள் சிலவற்றைச் செய்யவும் முடியாது.

சென்ற வாரம் கனடாவுக்கும் பெல்ஜியத்துக்கும் இடையே நிகழ்ந்த தகராறும் நமது வணிகத்துறை அமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் கூட்டத்தை விட்டுக் கோபத்துடன் வெளியேறியதும் நடந்தது.

என்ன நடந்தது?

கனடாவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையேதடையற்றவணிகஉடன்பாடுஒன்றை ஏற்படுத்துவதற்காகக்கனடா பல ஆண்டுகளாக முயன்று வருகிறது.Comprehensive Economic TradeAgreement(CETA)என அழைக்கப்படும் இந்த ஒப்பந்தத்துக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் எல்லா நாடுகளுமே ஒப்புதல் அளித்துவிட்டன. பெல்ஜியத்தில் முற்றான மாநில சுயாட்சி பெற்ற மாநிலங்கள் உள்ளன. அவற்றின் ஒப்புதல் இல்லாமல் பெல்ஜியம் சிணிஜிகி ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடியாது. பெல்கியத்தின் ஃபிரெஞ்சு மொழி மாநிலமான வலோனியா (Wallonia), பொதுசன வாக்கெடுப்பின் மூலம் இந்த ஒப்பந்தத்தி நிராகரித்து விட்டது. வலோனியாவின் மக்கள் தொகை ஆக 3.6 மில்லியன்தான். இதனால் கனடா மிகுந்த அதிருப்தி அடைந்துள்ளது. கிறிஸ்டியா ஃப்ரீலாண்ட் வெளியேறிய காரணம் அதுதான்.

வலோனியா மக்கள் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பவற்றில் தங்கியிருப்பவர்கள். இயற்கைமுறை விவசாயத்தை வலியுறுத்துபவர்கள். கால்நடைகளுக்கு செயற்கை ஹோர்மோன்கள் பயன்படுத்த மறுப்பவர்கள். ஒப்பந்தத்தி ஏற்றுக் கொண்டாலோ அவர்கள் கனடாவின் விவசாயிகளுடனும் பண்ணையாளர்களுடனும் போட்டி பொட்டுத் தோற்க வேண்டி வரும். ஏனெனில் செயற்கை ஹோர்மோன்கள் உட்பட எல்லா வகையான இயற்கைக்கு மாறான முறைகளையும் பின்பற்றி மலிவாக இறைச்சி, பால், என்பனவற்றைக் கனடா உற்பத்தி செய்கிறது. தன்னாட்சியும் உரிமையும் எவ்வளவு தூரம் செல்ல முடியும் என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம் அல்ல





செய்தித்தாள்களுக்குப் பணம் தருமா அரசு?

கனடாவின் ஆங்கில, பிரெஞ்சு செய்தித்தாள்கள் பெரும் நிதி நெருக்கடிகடியுள் உள்ளன. விளம்பரங்களும் முதலீடுகளிம் குறைந்து விட்டன. தனியார் முதலாளிகளின் சொத்தாக இருக்கும் பெரும்பாலான செய்தித்தாள்களில் ஊடகவியலாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டு விட்டார்கள்.

இந்த நிலையில், ஊடகத் துறைக்கும் அரசாங்கம் நிதிக் கொடை வழங்க வேண்டும் என்ற கூக்குரல்கள் எழ ஆரம்பித்துள்ளன. கெபெக் (Quebec) மாநிலத்தின் 146 செய்தித்தாள்கள் தமக்கு அரச நிதி தரப்பட வேண்டுமென அரசாங்கத்தைக் கோரியிருக்கிறார்கள். கூடவே தமது செய்தித்தாள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும் கேட்கிறார்கள்.

இப்படியான நிதி வசதி அவர்களுக்குக் கிடைத்தால் அரசு பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்களை அவர்கள் வைக்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

"சிஙிசி க்கு வழங்கப்படுகிறது தானே! அவர்கள் விமர்சனம் செய்வதில் நியாயமாக இருக்கிறார்கள். அது போல எம்மாலும் அது முடியும்" என அவர்கள் வாதிடுகிறார்கள்.

National Post செய்தித்தாளும் அதனை வெளியிடும் Post Media நிறுவனமும் கூட இப்படிக் கேட்கின்றன! சமூக ஊடகங்களும், இணைய வழியில் தமது செய்தித்தளங்களை விரிவுபடுத்தும் எண்ணிம/இணைய ஊடகவியல் (Digital Journalism) பெருமளவில் வார்ந்து வருவதும் செய்திதாள்களின் இத்தகைய சிக்கல்களுக்குப் பிரதான காரணம். நோர்வே, சுவீடன், டென்மார்க் போல இங்கும் எல்லச் செய்திதாள்களுக்கும் அரசு பணம் தர முன்வருமா?

சிவசேனை:

தமிழர்களிற்குள்ளும் மத சண்டை மூளுமா?

இலங்கைக்கும் சிவசேனை வந்துவிட்டது! என்ன நடக்கும்? வடக்கு, கிழக்கில் உள்ள கிறிஸ்தவ, இஸ்லாமிய, பௌத்த மதத்தினர் நெருக்கடிகளை சந்திப்பார்களா? மதரீதியான பதற்றங்கள் நடக்குமா? இந்து அடையாளம் மேலெழ தமிழ் அடையாளம் பின்தள்ளப்படுமா? தமிழ் அடையாளம் பின்தள்ளப்பட்டால் தமிழர்களின் உரிமைப் பயணம் பலவீனப்படுமா? தமிழர்களை பலவீனப்படுத்த திட்டமிட்டரீதியில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதா?

இப்படி நிறைய கேள்விகளாலும், சந்தேகங்களாலும், விவாதங்களாலும் தமிழ் இணைய, சமூகவலைத்தளங்கள் நிறைந்துள்ளன.

உண்மையில் சிவசேனை ஆபத்தானதா?

இதற்கு தெளிவான பதிலை இப்பொழுது சொல்ல முடியாதென்பதே உண்மை. சமூகவலைத்தளங்களில் மாற்றுக்கருத்தாளர்கள் எனப்படுபவர்கள் அதீதமாகபதட்டப்படுவதைப் போலவோ அல்லது சிவசேனை சும்மா அமைப்பு என அசட்டையாக இருப்பதை போலவோ அதனை அணுக முடியாது. சற்று எச்சரிக்கை கலந்த விழிப்பு அவசியம்.

இந்திய அரசியலில் சிவசேனா முக்கிய சக்தி. இந்து மதத்தின் பெயரால் அங்கு நடக்கும் வன்முறைகளின் ஊற்றுவாய் அந்த அமைப்பு. மும்பை தாரவி பகுதியில் சிவசேனை நிகழ்த்திய வன்முறைக்கு வரலாறேசாட்சி. இந்திய சிவசேனாவின் நீட்சிதான் இலங்கை சிவசேனை எனில் அது அவதானமாக கையாளப்பட வேண்டிய விவகாரம்.

ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவரான மறவன்புலவு க.சச்சிதானந்தத்தின் கூற்றுப்படிபார்த்தால், இரண்டு அமைப்புக்களிற்குமிடையில் நெருக்கமான பிணைப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. அப்படி நிகழ்ந்தால் அது ஆபத்துக்களை விளைவிக்கலாம்.

இந்திய சிவசேனா முஸ்லீம்களுடன் தீராத பகையை வைத்துள்ளது. சிவசேனாவின் நீட்சிதான் சிவசேனையெனில் அது தமிழர் போராட்டத்தை வழியில்லாத முட்டுச் சந்திற்குத்தான் கொண்டு செல்லும்.

பிரச்சனைகளை மதத்தின் பெயரால் அணுகும்போது ஏற்படும் விளைவுகள் பெரியவை. உதாரணமாக, திருக்கேதீஸ்வரத்திற்கு அண்மையில் மாதா சொரூபம் வைக்கப்பட்டதாக கூறப்பட்டது. அதை இந்து, கிறிஸ்தவ விவகாரமாக அணுகியதை விட, தமிழர்களாகத்தான் பெருமளவிற்கு அணுகப்பட்டது. அதனால் சிறிய சச்சரவுகள் தோன்றினாலும் அது பதற்றத்தை ஏற்படுத்துபவையாக மாறவில்லை.

நயினாதீவு புத்தர்சிலை விவகாரமும் அப்படித்தான். இந்த விவகாரங்களை தமிழர்கள் அரசியலின் ஒரு பகுதியாகத்தான் அணுகுகிறார்கள். மத விவகாரங்களாக குறுக்கவில்லை. புத்தர்சிலை பெருக்கத்தின் பின்னணியில் மத நோக்கங்களை விட அரசியல் நோக்கங்கள்தான் பெரிதும் இருக்கும்.

இந்த பின்னணியில் மத அமைப்பொன்று தலையெடுத்து, இப்படியான விவகாரங்களில் தலையிட்டால், போராட்டங்களில் இறங்கினால் அது சிக்கலை அதிகப்படுத்தும். தமிழர்களாக ஒன்றிணைவதை மதங்களாக பிளவுபடுத்துவது நிச்சயம் ஆபத்தே.

மத அடையாளங்களை காப்பாற்றுவது, மத மாற்றங்களை தடுத்து நிறுத்துவது போன்ற வேலைத்திட்டங்களைத்தான் சிவசேனை முன்மொழிந்துள்ளது.

மத அடையாளங்களை பேணுவதென்பதன் அர்த்தம் என்ன?

தமிழர்கள் எல்லா விடயத்தையும் விடவும் மதத்திற்கு முன்னுரிமையளிப்பவர்கள். கோயிலில்லா ஊரில்ல, கோலியல்லா தெருவிலேயே குடியிருக்க மாட்டோம் என வீதிக்குவீதி கோயில் கட்டி வைத்துள்ளார்கள். மத அடையாளங்களை வெளிப்படுத்த தடையிருப்பதாக எந்தப்பகுதியிலும் தமிழர்கள் முறையிட்டதில்லை. ஆலயத்தில் பகிரங்கமாக வழிபட அச்சப்பட்டு மனதிற்குள்கோயில் கட்டி வழிபடும் பூசலார்களும் இங்கில்லை.

வன்னியில் இறுதி யுத்தம் தீவிரம் பெற்றிருந்தது. கொத்துகொத்தாக இந்துக்கள், கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள். யுத்த வலயத்திற்கு வெளியில் இருந்த யாழ்ப்பாணம் உள்ளிட்ட எந்த தமிழர் பகுதியிலும் ஒரு இந்து ஆலயத்தில், ஒரு கிறிஸ்தவ ஆலயத்தில் திருவிழா தடைப்படவில்லை. வழிபாடுகளிற்கு அரசும் தடைவிதிக்கவில்லை.

இதற்காக, சிறுபான்மை தமிழர்களின் மத சுதந்திரம் பாதுகாக்கப்படுகிறது என்பது அர்த்தமல்ல. இந்த விவகாரம் அரசியல் விவகாரம். வடக்கில் வகைதொகையில்லாமல் விகாரைகள் முளைப்பது, இந்து ஆலயங்கள் தாக்கப்படுவது அரசியல் பின்னணியை கொண்டது. அது அரசியல்தீர்வின் மூலமே தீர்க்கப்படகூடியது. சிவசேனை சூலாயுதத்துடன் கோயில்களில் காவல் நின்று அனுராதபுர ஆலயம் இடிக்கப்பட்டதை போன்ற அடாவடித்தனங்களை நிறுத்த முடியாது. தேவையெனில் மோதல் போக்கை அதிகரிக்க மட்டும் செய்யும்.

அடுத்த விவகாரம் மதமாற்றம். தமிழர்கள் யாரும் அது இந்துவோ, கிறிஸ்தவர்களோ கட்டாயமாக பௌத்த மதத்திற்கு மாற்றப்படுவதாக ஒரு தகவலும் வெளியாகவில்லை. நில அபகரிப்பு, பௌத்தமயமாக்கல் போன்ற விவகாரங்கள் வேறு. மதமாற்றம் வேறு. பௌத்த மதமாற்ற அபாயம் இந்துக்களிற்கு கிடையாது.

ஆக நடப்பது இந்துக்கள் கிறிஸ்தவர்களாக மாறுவதே. அதிலும் றோமன் கத்தோலிக்கர்களாக மாறும் அபாயம் இல்லை. சிறிய சபைகள்தான் ஆட்களை உள்ளீர்ப் பதில் அதீத ஆர்வம் காட்டுகின்றன. ஆனால் இந்த விவகாரம் அச்சுறுத்துமளவிற்கு பெரிதாக இல்லை. இன்னொரு விடயம் இந்த மதமாற்றங்களும் கட்டாய மதமாற்றங்கள் அல்லஆகவே தற்போதைய நிலையில் மதத்தை முன்னிறுத்திய அமைப்புக்களின் தேவை தமிழர்களிற்கு கிடையாது. மதத்தை முன்னிறுத்திய நகர்வுகள் நிச்சயம் தமிழர்களை பிளவுபடுத்தும். நாங்கள் தமிழர்களாக சிந்திக்கப் போகிறோமா அல்லது இந்துக்களாகவும், கிறிஸ்தவர்களாகவும் சிந்திக்கப் போகிறோமா என்பதே இப்பொழுதுள்ள கேள்வி.

சிவசேனை விவகாரத்திற்கு இந்த பார்வை மட்டும்தான் உள்ளதென்றுமில்லை. இன்னொரு பார்வையும் உள்ளது.

இந்துக்கள் தமது அடையாளங்களை பேண ஒரு அமைப்பை உருவாக்கும் சகலவித உரித்தும் கொண்டவர்கள். பொதுபல சேனா தீவிரமாக பௌத்த மதவாதத்தை முன்னிறுத்துகிறது. முஸ்லீம்கள் அரசியலாலும் மதத்தாலும் ஒன்றுபட்டு, மத நிறுவனங்களை பலமாக பேணி வருகிறார்கள். கிறிஸ்தவ மத நிறுவனங்கள் நமது சமூகத்தில் எவ்வளவு பலமானதென்பதை அதிகம் எழுத வேண்டியதில்லை. அரசியல், காவல்த்துறையில் ஆதிக்கம் செலுத்த வல்லவை கிறிஸ்தவ மத நிறுவனங்கள். இவற்றுடன் ஒப்பிடும்போது இந்து மத நிறுவனங்கள் அதிகாரபீடங்களாக உருவெடுக்கவில்லை. அதிகார பீடங்களாக உருவெடுக்கும் நிகழ்ச்சித்திட்டங்களெதுவும் இந்து மத நிறுவனங்கள், அமைப்புக்களிடம் இருக்கவில்லை. பற்றற்றதன்மையை வலியுறுத்திய மதமல்லவா!

தேர்தல்சமயத்தில்செல்வாக்குசெலுத்தாத ஒரே மதம் இந்துதான். மற்றைய மதங்கள் தம்சார்ந்த வேட்பாளருக்கு ஆதரவளிக்கும். வடக்கு, கிழக்கிலும் இதுதான் நிலை.

மத அமைப்பொன்றை உருவாக்குவது ஒன்றும் சாவான பாவமல்ல. ஆனால், இந்த கட்டுரையின் ஆரம்ப பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களில் அவதானமாக இருக்க வேண்டியது அவசியம். யதார்த்தம் என்னவென்றால், தீவிர மத அமைப்புக்களை கட்டுக்குள் வைத்திருக்க முடியாது. படிப்படியாக தீவிர நிலையை நோக்கி அவை நகர்ந்துவிடும்.

இந்த விவகாரத்தில் உள்ள ஒரே ஆறுதல் மறவன்புலவு சச்சிதானந்தம் மட்டுமே. தமிழ்தேசிய அரசியலின் பாதையில் நடந்த நீண்ட வரலாறுடையவர். மத தீவிரவாத அமைப்பாக மாறுவதோ, மத சிக்கலை தோற்றுவிப்பதோ இந்த அமைப்பின் நோக்கமல்ல என்று அவர் கூறுகிறார். அவருக்குள்ள இந்திய தொடர்பை குறிப்பிட்டு, இது உள்நோக்கமுள்ள ஆபத்தான இந்திய இறக்குமதியென்ற எச்சரிக்கையை விடுபவர்களும் உள்ளனர்.

இன்னொரு ஒருங்கிணைப்பாளரான தமிழ்தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனும் சிவசேனை குறித்து யாரும் அச்சப்பட தேவையில்லை, இது அகிம்சைவழியிலான ஒரு அமைப்பு என்றுள்ளார். ஆனால் உலக வரலாறு சொல்வது வேறு விதமாக மதம் ஒரு போதை. அதை அருந்தியவர்கள் சாத்தான்களாகிறார்கள் என்கிறது.

– பிரமபுத்திரன்


சீ.யோகேஸ்வரன்


மறவன்புலவு க.சச்சிதானந்தம்

கடந்த 09.10.2016 அன்று வவுனியா வேப்பங்குளம் வைரவர் கோயில் மண்டபத்தில் சிவசேனை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இதன் ஒருங்கிணைப்பாளர்காக மறவன்புலவு க.சச்சிதானந்தம், சீ.யோகேஸ்வரன் தேர்வாகியுள்ளனர். இலங்கையின் 25 மாவட்டங்களிலும் அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்து மத அடையாளங்களை பேணுவதும், மதமாற்றத்தை தடுப்பதும் தமது பிரதான நோக்கம் என அறிவித்துள்ளனர்.

கஜேந்திரகுமாரின் த.தே.ம.முன்னணி அரசியலில் மேலெழும் சக்தியாக உருவாகாதது ஏன்?



கடந்தவாரம் யாழ் ஊடகஅமையத்தில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தியிருந்தார். அதில் அவர் தெரிவித்த கருத்துக்கள் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர்களிற்கு அவலாக இருந்தது. முகநூலில் அதை வைத்து கொண்டாடிக் கொண்டிருந்தார்கள்.

"எங்கள் தோல்விகளை பற்றியே சுமந்திரன் கதைத்துக் கொண்டு திரிகிறார். ஏனப்பா அதையே கதைத்துக் கொண்டு திரிகிறீர்கள். போகுமிடமெல்லாம் எங்களை பற்றியே கதைக்கிறார். எங்களுடன் ஏதாவது இரகசிய காதலோ தெரியாது" இது அவர் கதைத்ததன் ஒரு பகுதியின் சாரம்.

தமிழ்தேசியம் பேசும் கட்சிகளில் அரசியல் தீர்வு,அரசியலமைப்பு தொடர்பில் அறிவுசார் உரையாடல்களில் ஈடுபடத்தக்கவர்கள் அதிகளவில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியில் உள்ளார்கள் என்ற அபிப்பிராயம் பொது வெளியில் உள்ளது. தமிழர்களின் அரசியல் இலக்கு தொடர்பில் கோட்பாட்டு விளக்கங்களுடன் அந்தக்கட்சி பேசி வருகிறது. பல்கலைகழக மாணவர்கள், சட்டத்தரணிகளில் கணிசமானவர்கள் கட்சியுடன் இருக்கிறார்கள் என்பதை போன்ற அபிப்பிராயமும் உள்ளது. இதெல்லாம் அந்தக்கட்சி மீது அறிவுசார் பிம்பமொன்றை விழுத்தியுள்ளது.

எனினும், தமிழ்தேசிய மக்கள் முன்னணி தேர்தல் அரசியலில் மேலெழும் சக்தியாக உருவெடுக்கவில்லை. இதற்கு காரணம் என்ன?

அன்றைய பத்திரிகையாளர் சந்திப்பு தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் அரசியலின் ஒரு அளவுகோல். அண்மைய சில வருடங்களில் தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் அரசியல்சுமந்திரனை முன்னிறுத்தியதாகவே மாறியிருக்கிறது. ஆரம்பத்தில் தமிழ்தேசிய கூட்டமைப்பின் குறைகளில் அரசியல் செய்ய ஆரம்பித்தது, இப்பொழுது சுமந்திரனின் குறைகளில் அசியல் செய்ய ஆரம்பித்திருப்பது பெரும் வீழ்ச்சியே.

அன்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் சுமந்திரனிற்கு எதிரான விமர்சனத்தில் விஞ்ஞானபூர்வ பார்வை கஜேந்திரகுமாரிடம் இருக்கவில்லை. திருநாவுக்கரசின் புத்தக வெளியீட்டில் நடந்த எந்த நிகழ்வையும் இந்த பத்தியாளர் ஆதரிக்கவில்லை. சுமந்திரன் தனது உரையில் சில விடயங்களை தவிர்த்திருக்க வேண்டுமென்பதே பத்தியாளரின் தனிப்பட்ட கருத்தும் கூட. ஆனால் தவிர்த்திருக்க வேண்டிய உரைகளை கூட அதிகபட்சவிஞ்ஞானத்தன்மையுடனும், தர்க்கத்துடனும்தான் அவர் முன்வைத்தார். தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தேர்தல் தோல்விகள் பற்றிய சுமந்திரனின் கருத்துக்கள் விஞ்ஞானபூர்வமானவை. ஆனால் அதற்கு பதில் சொல்ல வந்த கஜேந்திரகுமாரிடம் அப்படியான தர்க்கரீதியான பலம், விஞ்ஞானபூர்வ தன்மை இருக்கவில்லை.

ஈ.பி.டி.பியின் அரசியல் தோல்வியும் இப்படித்தான் நிகழ்ந்தது. ஈ.பி.டி.பி தனக்கான தனித்துவமான அரசியல் உருவாக்கம் செய்யவில்லை. மாறாக தமிழ்தேசிய கூட்டமைப்பில் பிழை காணும் அரசியல்தான் செய்தது. தேர்தல் மேடைகில் பெரும்பாலான ஈ.பி.டி.பி முக்கியஸ்தர்களின் பேச்சை அவதானித்தால் விடயம் புரியும். தமிழ்தேசிய கூட்டமைப்பை குற்றம் காண்பதிலேயே நேரத்தை செலவிடுவார்கள். தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் உருவாக்கத்தில் மக்கள் நலன்சார்ந்த சிந்தனைகள் இருந்திருக்கலாம். ஆனால் அது ஒன்றே தகுதியாகாது. மற்றவர்களை விமர்சித்து, விமர்சனங்களில் அதிக கவனம் கொடுக்காமல் தமக்கான அரசியல்பாதையை உருவாக்க வேண்டும்.

முகப்புத்தகத்தில் உள்ள தமிழ்தேசிய மக்கள் முன்னணி ஆதரவாளர்களின் அரசியல் எனப்படுவது சம்பந்தன், சுமந்திரனை கலாய்த்து மீம்ஸ் போடுவது என்ற அளவிலேயே உள்ளது. உலகம் மிகப் பெரியது. தமிழர்களின் அரசியல் பிரச்சனையும் மிகப்பெரியது. தமிழர்களின் அரசியலில் குதித்தால் அதற்கு தக்கதாக மாறிக்கொள்ள வேண்டும். ஏனெனில், மாறாததெதுவும் நிரந்தரமானதல்ல!

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மீதான பொலிசாரின் துப்பாக்கிச் சூடு:

"வாள்வெட்டைத் தடுக்க சிறப்புப் பொலிஸ் பிரிவை உருவாக்கியதன் பலன் அப்பாவி மாணவர்கள் வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்படுவதுதானா?"

யாழ் மாவட்ட பா.உ. ஈ.சரவணபவான்



"பல்கலை மாணவர் மீதான துப்பாக்கிச் சூட்டின் பின்னணி முழுமையாக ஆராயப்பட வேண்டும். நடைபெற்ற சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றேன். உரிய நடவடிக்களை விரைந்து எடுக்குமாறு பொலிஸ்மா அதிபரையும், ஜனாதிபதி மற்றும் பிரதமரையும் கோருகின்றேன்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களின் உயிரிழப்புத் தொடர்பாக வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

"கொக்குவில், குளப்பிட்டியில் இரு பல்கலைக் கழக மாணவர்கள் உந்துருளியில் சென்றபோது விபத்தில் உயிரிழந்தாக முதலில் தகவல்கள் வெளிவந்தன.பின்புநடத்தப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் ஒருவர் சுடப்பட்டதால் இறந்தாகவும் அதனால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக மற்றையவர் இறந்தாகவும் தெரிய வந்துள்ளது.

இவர்கள் உந்துருளியில் சென்ற போது பொலிஸார் மறித்தாகவும் அவர்கள் நிற்காமல் சென்ற காரணத்தினால் சுடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மறிக்கும் போது அவர்கள் செல்லும் வாகனத்தின் இலக்கத்தை அடையாளம் கண்டு பின்பு அவர்களை கைது செய்வது சிரமமான காரியம் அல்ல. மேலும் பல இடங்களிலும் கண்காணிப்பு கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ள நிலையில் அவர்களை அடையாளம் காண்பதும் இயலுமான காரியமே. அப்படியான நிலையில் அவர்கள் சுடப்பட்டிருக்கின்றார்கள் என்றால் அது மக்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒரு வாகனம் மறிக்கும் போது நிற்காமல் சென்றால் அதற்கு எதிராக தவிர்க்க முடியாத உயர்பட்ச நடவடிக்கையாகரயருக்குசுடுவதேவழமையானவிடயமாகவுள்ளது. ஆனால் இங்கு மாணவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது முக்கியமாக ஒரு முறை மீறிய நடவடிக்கை என்றே கருத வேண்டியுள்ளது.

"இது தொடர்பாக புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் 5 பொலிஸார் பணி இடை



நிறுத்தம் செய்யப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனை நாம் வரவேற்கும் வேளையில் இது தொடர்பான விசாரணைகள் நேர்மையாகவும் நியாபூர்வமாகவும் நடத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்கின்றோம்.

போர் முடிந்த பின்பு படுகொலைகள் கொள்ளைகள் கிறிஸ்பூத அச்சுறுத்தல்கள் என பல விதங்களிலும் தமிழ் மக்கள் மீது கொடுமைகள் இழைக்கப்பட்டன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை.குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படவும் இல்லை.இந்த விடயங்களில் பொலிஸார் ஒரு அக்கறையற்ற போக்கே கடைப்பிடித்தார்கள் என்று மக்கள் நம்பினார்கள்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் அத்தகைய அத்துமீறல்கள் இல்லாமல் போய்விட்ட போதிலும் வாள் வெட்டுச் சம்பவங்கள் மக்களின் இயல்புவாழ்வுக்கு பெரும் அச்சுறுத்தலாக விளங்கியது. பகிரங்க இடங்களில் வாள்களுடன் வந்து காடைத்தனம் புரிந்து குற்றச் செயல்களில் ஈடுபட்ட போதும் அதனைத் தடுப்பதற்கு பொலிஸார் உரிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. சில சம்பவங்களில் சிலர் கைது செய்யப்பட்டாலும் கூட அத்தகைய சம்பவங்கள் தொடர்ந்தே வந்தன. சில நாள்கள் அவை இல்லாமல் போன போதும் மீண்டும் அத்தகைய வாள் வெட்டுச் சம்பவங்கள் ஆரம்பித்துள்ளன. அதை தடுப்பதற்கு சிறப்பு பொலிஸ் பிரிவு அமைத்து நடவடிக்கை எடுக்க ஆரம்பித்திருப்பதாக செய்திகள் வந்தன. ஆனால் அதன் பலன் அப்பாவி மாணவர்கள் வீதியில் வைத்து சுட்டுக் கொல்லப்படுவதுதானா என்ற கேள்வி எழுகின்றது.

"அடிப்படையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற அநீதிகளுக்கு பின்னால் நின்ற சூத்திரதாரிகள் யார் என்பது கண்டு பிடிக்கப்படவுமில்லை. வெளிப்படுத்தப் படவுமில்லை. அதன் காரணமாகவே சிலர் தண்டிக்கப்பட்டாலும் கூட அவை தொடர்ந்து இடம்பெற்றன என்பதை சகலரும் உணர்ந்து கொள்ள முடியும். இன்று அவற்றைக் கட்டுப்படுத்துகின்றோம் என்ற பெயரில் அப்பாவி மக்கள் மேல் பொலிஸ் பாய்கின்றதா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.


"மீண்டும் பயங்கரவாத நடவடிக்கைகள் ஆரம்பமாகி விட்டன என்று ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தும் முகமாக இப்படியான நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றதா எனக் கேட்க வேண்டியுள்ளது. இம் மாணவர்கள் பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்குடன் சென்றார்கள் என்றும் அதை தடுத்து நிறுத்தவே சுடப்பட்டார்கள் என்று காரணம் சொல்லும் முகமாக இதை மேற்கொண்டிருக்கலாமோ என்று ஒரு கேள்வியும் எழுகின்றது. மீண்டும் பயங்கரவாதம் தலை தூக்கப் போகின்றது என்று ஒரு தோற்றப்பாட்டை ஏற்படுத்தி சில சக்திகள் முனைந்து வருவதை நாம் அறிவோம். எனவே சம்பவம் தொடர்பாக பக்க சார்பற்ற விசாரணை நடத்தப்பட்டு குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்.

"அது மட்டுமன்றி இத்தகைய துப்பாக்கிப் பிரயோகத்தின் நோக்கம் என்ன இதன் பின்னணி என்ன என்பது ஆழ்ந்து ஆராயப்பட வேண்டும். அப்படியில்லாமல் குற்றவாளிகள் மாத்திரம் இனங் காணப்பட்டாலோ அல்லது அவர்கள் குற்றமற்றவர்கள் என்று விடுதலை செய்யப்பட்டாலோ தொடர்ந்தும் எமது மக்கள் நிம்மதியற்ற அச்சுறுத்தலுக்க உள்ளான ஒரு வாழ்வையே எதிர்நோக்க வேண்டிவரும். எனவே சம்பவத்தை நாம் வன்மையாக கண்டிப்பதுடன் உரிய நடவடிக்கைகளை உரிய முறையில் எடுக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபரையும், பிரதமர், ஜனாதிபதி ஆகியோரையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கின்றோம்" என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் முடிந்த பின்பு படுகொலைகள் கொள்ளைகள் கிறிஸ்பூத அச்சுறுத்தல்கள் என பல விதங்களிலும் தமிழ் மக்கள் மீது கொடுமைகள் இழைக்கப்பட்டன. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடுகள் செய்யப்பட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவுமில்லை.











அரங்கம் நிறைந்த இசைவிழாவாக நடந்த அன்புநெறியின் நாதசங்கமம் 2016!

சென்ற சனிக்கிழமை (8.10.2016) கனடா அன்புநெறி மனிதநேய உதவி அமைப்பு நடத்திய நாதசங்கமம் 2016 நிகழ்வு, ரொறன்ரோவில் உள்ள சேர் ஜோன் மக்டொனால்ட் கலையரங்கில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பம்பைமடு, வவுனியாவில் அமைந்துள்ள VAROD என்று அழைக்கப்படும், மனநலம் பாதிக்கப்பட்ட பெண்கள் காப்பகத்தின் கட்டிட நிதிக்காக இந்த நிகழ்ச்சி ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அரங்கம் நிறைந்த விழாவாக நடைபெற்ற இந்த விழாவில், கலைமாமணி ராஜேஷ் வைத்தியா அவர்களின் வீணை இசைக் கச்சேரி முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்றிருந்தது. பிரபலமான சில பாடல்களைத் தெரிவு செய்து வாசித்த கலைமாமணி ராஜேஷ் வைத்தியா அவர்களின் வீணை இசை, அரங்கை மகிழ்ச்சிப் பிரவாகத்தில் ஆழ்த்தியதென்றே சொல்லலாம். கூடவே பார்வையாளர்களின் விருப்பப் பாடல்களையும் வீணை இசையில் மீட்டி சபையோரைப் பரவசப்படுத்தினார் அவர்.

மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து, வேணு, சுவேதா கிள்ளிவளவன், நிவேதா கிள்ளிவளவன் ஆகியோர் இசைத்த கனடிய தேசிய கீதம் மற்றும் தமிழ் வாழ்த்துப் பாடலுடன் விழா ஆரம்பமானது. அன்புநெறி மன்றத்தின் தலைவர் திரு. சிவகௌரிபாலன் அவர்களின் வரவேற்புரையை அடுத்து, அன்புநெறி பற்றிய காணொளி ஒன்று காட்சிப்படுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து செயலாளர் வேணு சிவக்கொழுந்து அவர்களால் போதகர் அல்பேட் அருள்ராஜா அவர்களிடம் நிதியுதவித் தொகை கையளிக்கப்பட்டது. நிதியைப் பெற்றுக்கொண்டு உரையாற்றிய போதகர் அல்பேட் அருள்ராஜா அவர்களின் உரையைத் தொடர்ந்து இந்த நிகழ்விற்கான நிதி உதவியை வழங்கியோர், கலைமாமணி ராஜேஷ் வைத்தியாவ மற்றும் இசை உதவி வழங்கியோர்களுக்கான பாராட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இலங்கையில் நடைபெற்ற கோரயுத்தம் முடிந்வடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்ட போதும், அந்த யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள் பலர் இன்னும் அவல நிலையிலேயே இருப்பது சிலருக்குத் தெரியாது. உடமைகளை இழந்து, உடல் ஊனமுற்று, உறவுகளைப் பறிகொடுத்து, அன்பும் ஆதரவும் வேண்டி நிற்கும் எமது தாயகத்து உறவுகளுக்குக் கைகொடுப்பதற்காகவே அன்புநெறி மனிதநேய உதவி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. அன்று மனித நேயத்தை இலட்சியமாகக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்குத் தேவையாக முக்கியமான உணவு உடை மருந்து போன்றவற்றைக் கொடுத்ததன் மூலம் அன்புநெறியின் சேவை ஆரம்பமானது. தொடர்ந்து மீளக் குடியமர்ந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைக் குறிப்பாக கழிப்பிட வசதிகளைச் செய்து கொடுத்தும், சிறுதொழில்களைச் செய்ய உதவிகளைச் செய்தும் அன்பு நெறி தனது சேவைகளைத் தொடர்ந்தது. 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற நாதசங்கமம் நிகழ்வில் சேகரிக்கப்பட்ட நிதி உதவியைக் கொண்டு 'அன்புநெறி மனை' என்ற மனநலம் குன்றிய பெண்கள் காப்பகம் பம்பைமடு என்ற இடத்தில் கட்டி முடிக்கப்பட்டது.

மேலும் சில வசதிகளை அந்தக் காப்பகத்திற்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவே இன்று இந்த நாதசங்கமம் நடைபெற்றது. இதில் வரும் நிதியைக் கொண்டு அன்புநெறி மனையில் ஒரு சமையல் அறையும், உணவருந்தும் கூடமும் அமைக்கப்படும் என்று அமைப்பாளர்கள் நிகழ்வின் போது தெரிவித்திருந்தனர்.

நேரம்போனதே தெரியாது சபையினர் வீணை இசையில் கட்டுண்டு கிடந்தனர் என்றே சொல்லத் தோன்றுகின்றது. ஆனாலும் நேரக்கட்டுப்பாடு காரணமாக இசை நிகழ்ச்சியை முடிவுக்குக் கொண்டு வரவேண்டியிருந்தது. மறுநாள் மொன்றியலில் இது போன்ற இன்னொரு நிகழ்ச்சி நடைபெறும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து அன்புநெறி மன்றத்தின் செயலாளர் திரு. மு. மணிமாறன் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்ச்சி சிறப்பாக முடிவடைந்தது.

தமிழகமும் காவிரி நீர்ப் பங்கீட்டுப் பிரச்சினையும்:

ஒரு வரலாற்று ரீதியான அவதானங்களின் தொகுப்பு 3



கடந்த இருவார இதழ்களிலும், காவிரி நீர் பிரச்சினை பற்றிய வரலாற்று விடயங்களைச் சுருக்கமாக விபரித்த அரசெந்திகுமரன் அவர்கள் ஆறாம்திணை இணைய இதழில் 2007இல் எழுதிய கட்டுரை ஒன்றினை இப்ந்தத் தொடரில் பகிர்ந்திருந்தோம். 2007இல் எழுதப்பட்ட இந்தக் கட்டுரை அன்றைய நிலையில் குறிப்பிட்ட விடயங்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை அதே நிலமை தொடர்வதை விளக்கும், தமிழ்நாடு மக்கள் கலை இலக்கியக் கழகம் (ம.க.இ,க) கடந்த செப்ரெம்பர் மாதம் வெளியிட்ட ஒரு அறிக்கை வாசிப்பது வாசகர்களுக்கு இதுபற்றய மேலதிக விபரங்களை தரும் என்பதால் அதன் முக்கிய பகுதிகளை இங்கு பிரசுரம் செய்கிறோம்.

வன்முறைக்கு யார் காரணம்?

காவிரியிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீரை திறந்துவிடுமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்ட பிறகு தான் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் துவங்கின. தமிழர்களின் வீடுகள், கடைகள், வாகனங்கள் என்று கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் சூறையாடப்பட்டுள்ளன. இந்த வன்முறை தொழில்முறை கிரிமினல்களுக்கே உரிய முறையில் தெளிவாக திட்டமிட்டு நடத்தப்பட்டிருக்கிறது. கன்னட இனவெறியின் பெயரால் இதை பின் நின்று தூண்டிவிட்டு இயக்கியது பா.ஜ.கவும் அதன் குரங்குப்படைகளான ஸிஷிஷி இந்துமதவெறி கும்பலும் தான்.

வரவிருக்கின்ற கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பா.ஜ.கவை ஆட்சியில் அமர்த்துவதற்காக காவிரி பிரச்சினையை கையில் எடுத்துக்கொண்டு கன்னட இனவெறியை தூண்டிவிட்டிருக்கிறது இந்து மதவெறி கும்பல். கலவரங்கள் மூலம் ஆட்சியை பிடிப்பது பா.ஜ.க விற்கு புதிதல்ல. மத்தியில் ஆட்சிக்கு வந்ததும், பல மாநிலங்களில் ஆட்சியை பிடிப்பதற்கும் இந்து முஸ்லீம் கலவரங்களையே பா.ஜ.க பயன்படுத்துகிறது. மோடியும் மத்திய அரசும் இப்பிரச்சினையில் தலையிடாததற்கு இது ஒரு காரணம்.

காவிரியில் தண்ணீர் இல்லையா?

கர்நாடகாவிற்கே போதிய நீர் இல்லாத போது தமிழகத்திற்கு எப்படி தர முடியும் என்று சில கன்னடர்கள் கேட்கின்றனர். இது உண்மையா? உண்மை தான். கோடைக்காலங்களில் கர்நாடகாவில் குடிநீர் பிரச்சினை தலைவிரித்தாடுவதும், காவிரியில் போதுமான நீர் இல்லாததும் உண்மையே. கோடைக் காலத்தில் பெங்களூருவில் ஒரு குடம் தண்ணீர் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. வட கர்நாடகாவில் தண்ணீர் தட்டுப்பாட்டால் பல குடும்பங்கள் மூன்று மாதங்களுக்கு திருமணங்களையே தள்ளி வைக்கின்றன. இது உண்மை தான் என்றாலும், அதற்காக காவிரியில் தமிழகத்தின் உரிமையை விட்டுக்கொடுக்க முடியாது.

ஒரு நதி உருவாகின்ற இடத்திற்கு மட்டும் அது சொந்தமல்ல. அது எங்கெல்லாம் பாய்கிறதோ அங்குள்ள அனைவருக்கும் சொந்தமானது. அதிலும் கடைமடைப் பகுதிக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்பது தான் சர்வதேச நதிநீர் பங்கீட்டு விதி. ஏனெனில், வெள்ளப்பெருக்கு ஏற்ட்டால் அதிக பாதிப்புகளை சந்திப்பது கடைமடைப்பகுதி தான். எனவே தமிழகத்திற்கு மட்டுமல்ல புதுச்சேரி, கேரளாவிற்கும் கூட காவிரியில் உரிமை உள்ளது. பற்றாக்குறை காலங்களிலும் இருப்பதை சமமாக பிரித்துக்கொள்வதே சரியானது.

நீர் குறைய யார் காரணம்?

கர்நாடகாவின் குடகு மாவட்டத்தில் உள்ள குடகுமலையிலிருந்து தான் காவிரி துவங்குகிறது. இப்பகுதி அடர்ந்த கருங்காடாகும். உலகமயமாக்கல் கொள்கை அமுல் படுத்தப்பட்ட பிறகு, கடந்த 25 ஆண்டுகளில் இப்பகுதியில் உள்ள பெரிய காடுகள் அனைத்தும் அழிக்கப்பட்டு முதலாளிகளின் லாபவெறிக்காக ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் டீ,காபி,ரப்பர்,தேக்குத்தோட்டங்களும், சுரங்கங்களும் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் இந்த காடு சுற்றுலாத்தளமாகவும் மாற்றப்பட்டுவிட்டது. அதற்காக இங்குள்ள நீர்நிலைகளும், காடுகளும் அழிக்கப்பட்டு வார இறுதி வக்கிரக் கொண்டாட்டங்களுக்காக நூற்றுக்கணக்கான கூர்க் ரிசார்ட்டுகளும், நட்சத்திர விடுதிகளும் கட்டப்பட்டிருக்கின்றன. காவிரியின் நீர்ப்பிடிப்புப்பகுதியான இம்மலையில் உள்ள காடுகளும், நீர்நிலைகளும் அழிக்கப்பட்டதன் விளைவாக மழைப்பொழிவு குறைந்து இயற்கை சமநிலை குலைந்துவிட்டது. (முதலாளிகள் குலைத்துவிட்டார்கள்) காவிரியில் நீர் குறைய இதுவே காரணம். எதிர்காலத்தில் போதிய மழைப்பொழிவு இல்லாவிட்டால் காவிரி ஆறு இல்லாமல் கூட போகலாம்.

அடுத்து, காவிரியிலிருந்து பெங்களூருக்கு நாள் ஒன்றுக்கு 140 கோடி லிட்டர் தண்ணீர் பெறப்படுகிறது. இதில் 52% நீர் வீணடிக்கப்படுகிறது, அதாவது 72 கோடி லிட்டர். தண்ணீரை வீணடிக்கும் மெட்ரோ நகரங்களில் பெங்களூரு இரண்டாம் இடத்தில் இருக்கிறது.

உலகமயமாக்கல் கொள்கை அமுல்படுத்தப்பட்ட கடந்த 25 ஆண்டுகளில் பெங்களூருவில் இருந்த இயற்கைச் சூழலும், ஏரி, குளங்களும் அழிக்கப்பட்டு லட்சக்கணக்கான சதுர அடிகளில் ஆயிரக்கணக்கான பிரம்மாண்ட ஐடி பூங்காக்களும், பன்னாட்டு நிறுவனங்களும், ஷாப்பிங் மால்களும், உல்லாச, ஆடம்பர விடுதிகளும், இரவு நேர கிளப்புகளும், நீர் விளையாட்டு பூங்காக்கள், செயற்கை கடல்கள், கோல்ப் மைதானங்கள், நட்சத்திர விடுதிகள், குதிரைப் பந்தய மைதானங்களும் கட்டப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு தினமும் பல லட்சம் லிட்டர் காவிரி நீர் வீணடிக்கப்படுகிறது. இது தவிர பெப்சி, கோக் ஆலைகளுக்கு தனியே 13 லட்சம் லிட்டர் கொடுக்கப்படுகிறது. இவ்வாறு விவசாயிகளுக்கு செல்ல வேண்டிய நீர் பன்னாட்டு கம்பெனிகளுக்கு திருப்பிவிடப்படுகிறது. இதனால் பெங்களூர் மக்களுக்கு கோடைகாலத்தில் நீர் கிடைப்பதில்லை. தினமும் 72 கோடி லிட்டர் காவிரி நீர் பன்னாட்டு கம்பெனிகளால் வீணாக்கப்படுவதை கன்னட மக்கள் அறிந்தால் என்னவாகும்? அவர்களை அந்தளவுக்கு செல்லவிடாமல் தடுப்பதற்கு தான், ஆளும்வர்க்கமும், அரசியல்கட்சிகளும் இனவெறியை தூண்டிவிடுகின்றன.

விவசாயத்தை அழிக்கும் கார்ப்பரேட் கொள்கை.

தமிழர்களையும் கன்னடர்களை மோத விட்டு வேடிக்கை பார்ப்பதன் மூலம் அரசும் ஆளும் வர்க்கமும் தமது நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்கின்றன. இல்லையென்றால் இத்தகைய மோதல்களை அரசு கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்காது.

மத்திய, மாநில அரசுகள் நடைமுறைப் படுத்தி வரும் தனியார்மயதாராளமய உலகமய கொள்கை என்பது விவசாயத்தை அழித்து முதலாளிகளை கொழுக்க வைக்கும் கொள்கையாகும். காவிரி பாசன பகுதிகளில் மீத்தேன் எடுக்கும் திட்டம் அத்தகையதே. இத்திட்டம் வந்தபோது தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்ட மக்கள் போர்க்குணத்துடன் எதிர்த்ததால் நிறுத்திவைக்கப்பட்டது. எனினும், முதலாளிகளுக்கான இந்த அரசு மீண்டும் அதை கொண்டுவரலாம். அப்போது எதிர்ப்பில்லாமல் நடைமுறைப்படுத்த வேண்டுமானால் விவசாயம் இருக்கக் கூடாது.

விவசாயம் செய்தால் மக்கள் நிலத்தை காக்க மீதேனை எதிர்த்துப் போராடுவார்கள். எனவே விவசாயத்தை ஒழிக்க வேண்டும், விவசாயத்தை ஒழிக்க வேண்டுமானால் ஆற்றில் தண்ணீர் வரக்கூடாது. காவிரி நீர் கோரி வழக்கு போட்டால் தண்ணீரைத் திறக்கச்சொல்லி நீதிமன்றம் பேருக்கு ஒரு உத்தரவிடும். பிறகு நீதிமன்றமே அதை மதிக்காது. பா.ஜ.க வோ உள்ளுக்குள்ளிருந்து கன்னட இனவெறியை தூண்டிவிடும். கர்நாடகம் பற்றி எரியும், பிறகு தமிழகத்திற்கு தண்ணீர் வராது. நீரின்றி விவசாயம் அழியும். வேலை தேடி விவசாயிகள் நகரங்களுக்கு சென்றால், முதலாளிகளுக்கு குறைந்த கூலிக்கு ஆட்கள் கிடைப்பார்கள். மீதேன் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தலாம்.


நீதிமன்றத்தை அவமதித்துவிட்டார்கள் என்று வழக்குரைஞர்கள் மீது பாய்ந்து பிராண்டி சஸ்பெண்ட் செய்யும் நீதிபதிகள், தமது உத்திரவை மதிக்காமல் வன்முறையில் ஈடுபடுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமலிருப்பதற்கும், மாநில அரசின் உரிமைகளில் தலையிட்டு அதிகாரம் செய்யும் மத்திய அரசு தனது அதிகாரத்தை பயன்படுத்தாமல் அமைதி காப்பதற்கும், மாநிலத்தின் உரிமைக்காக மாநில அரசு போராடததற்கும் பின்னால் இத்தகைய மறுகாலனியாக்க காரணங்கள் இருக்கின்றன. கன்னட இனவெறியை தூண்டிவிடுவதற்கும் இது போன்ற காரணங்கள் உள்ளன.

நாம் என்ன செய்ய வேண்டும்?

தமிழகத்திற்கான காவிரி நீரை பெற நாம் என்ன செய்ய வேண்டும்? 40 ஆண்டுகளாக இப்பிரச்சினை ஒரு முடிவுக்கு வராமல் இழுத்துக்கொண்டிருப்பதற்கு முக்கிய காரணம் மத்திய அரசு தான். காவிரி பிரச்சினையால் தமிழக கன்னட மக்களிடையே உள்ள பகை அணைந்துவிடாமல் நெருப்பை ஊதிவிடுவதில் மத்திய அரசு கவனமாக இருக்கிறது. எனவே, தேசிய இனங்களை மோதவிட்டு வேடிக்கை பார்க்கும் மத்திய அரசு தமிழகத்திற்கு நியாயமாகவும், நேர்மையாகவும் நடந்துகொள்ளும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அதிலும் பார்ப்பன பா.ஜ.க வுக்கு தமிழகத்தின் மீது எப்போதும் ஒரு வகை வெறுப்பும் பகைமையும் உண்டு. காரணம் தமிழகத்தின் பார்ப்பன எதிர்ப்பு மரபும், திராவிட இயக்கமும் தான். இந்த பிரச்சினையில் மட்டுமில்லை பொதுவாகவே பா.ஜ.க வுக்கும் இந்துமதவெறி கும்பலுக்கும் தமிழகத்தின் மீது வண்மமும், வெறுப்பும், காழ்ப்பும் உண்டு.

எனவே, தமிழகத்தை ஓரவஞ்சனையுடன் நடத்தும் மத்திய அரசை பணிய வைக்கும் போரட்டங்களை தமிழகம் முழுவதும் வீச்சாக நடத்துவதே இப்பிரச்சினைக்கான தீர்வாக அமையும். தமிழகத்திலிருந்து மத்திய அரசுக்கு செலுத்தப்படும் வரி செலுத்தப் படக்கூடாது, தமிழகத்தில் உள்ள மத்திய அரசின் நிறுவனங்கள் அனைத்தையும் செயல்படவிடாமல் முற்றுகையிட்டு முடக்க வேண்டும். நெய்வேலியிலிருந்து மின்சாரத்தையும், நரிமணத்திலிருந்து எண்ணெயையும் நிறுத்த வேண்டும். அத்துடன் தமிழகத்தில் கட்சி நடத்திக்கொண்டு தமிழகத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடும் பாரதிய ஜனதா, ஸி.ஷி.ஷி கும்பலை தமிழ் மக்களிடம் அம்பலப்படுத்தி விரட்டியடிக்க வேண்டும். இத்தகைய கிளர்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபடுவதன் மூலமே மத்திய அரசை பணிய வைத்து காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்ட முடியும்.

- ம.க.இ.க.



சுய நிதி முகாமைத்துவம்–2

கடன் என்னும் மாயவலை!

பணமில்லாதவரைப் பிணமும் மதியாது என்பார்கள். இந்தப்பணத்தின் வரலாறு என்ன என்று சிந்தித்துப் பார்த்திருக்கிறீர்ளா? மனிதர்களின் கொடுக்கல் வாங்கல்கள் வளர வளர பண்டமாற்றில் உள்ள சிக்கல்களைத் தவிர்ப்பதற்காக பரிமாற்று ஊடகமாக பணம் கண்டுபிடிக்கப்பட்டது. பரிமாறலில் உள்ள சிக்கலை பணத்தின் வளர்ச்சி தீர்த்தது. ஆனால் இப்போது பணம் என்பது ஒரு சிக்கல் நிறைந்த பரிமாறலிற்கு வித்திட்டு இருக்கிறது. பணம், பங்குச்சந்தை, வங்கிகள் என இன்றைய நிதி உலகு வளர்ந்திருக்கும் இந்நிலையில் நாம் எல்லோருமே ஒருதடவை நினைத்துப்பார்க்க வேண்டிய விடயம் என்னவென்றால் பணம் என்பதற்கு உள்ளார்ந்த பெறுமதி என்கிற ஒன்று இல்லை. பணம் என்பது பரிமாற்று ஊடகமாக மட்டுமே பயனடைகிறது. ஒரு தேசத்தின் உண்மை உற்பத்திகள் வளராமல் பண ரீதியாக வரும் வளர்ச்சியெல்லாம் வெறும் வீக்கம் தான். எப்படியும் ஒரு முறை அந்த நிதிச் சந்தை உண்மை உற்பத்தியின் இடத்துக்கு விழுந்தே ஆகும். அதனால் தான் தவறாமல் கொஞ்ச காலத்துக்கொருமுறை நாம் பொருளாதார வீழ்ச்சிகளை சந்தித்து வருகிறோம். வட அமெரிக்கா போன்ற மிகச்சிக்கலான நிதிச் சந்தைகளின் மிகப் பெரும் சாபம் என்னவென்றால் இந்த பணம் என்னும் மாயவலை தான். இதை இயக்கும் கைகள் தனிமனிதருடையவை அல்ல. கூட்டு எதிர்பார்ப்புக்கள் மற்றும் பேராசைகளின் வடிவம் என்றே சொல்லலாம்.

நிதிச்சந்தையின் சிக்கலைப் பார்த்து பயந்து ஒதுங்கியிருப்பவர்கள் நம்மில் பலர் இருக்கிறார்கள். அதனைக் கையாளத் தெரிந்தவர்கள் நிறைய பயனடைந்தும் இருக்கிறார்கள். எது எப்படியோ நமது நிதி முகாமைத்துவ திறமையை நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக்கொள்ளல் இந்த சிக்கலான உலகில் மிகுந்த பயனைத் தரும். எல்லாவற்றுக்கும் முதல்படி நமது கடன் அட்டைகளை நாம் சரிவர முகாமைத்துவம் செய்யப் பழகிக் கொள்வது தான். சென்ற வாரம் கடன் அட்டைகளைப்பற்றி ஒரு அறிமுகம் பார்த்தோம். கடன் அட்டை என்றாலே ஆபத்து என்றும் அது ஒரு தவிர்க்க முடியாத தலைவலி என்றும் நம்மில் பலர் கருதுவதுண்டு. ஆனால் கடன் அட்டையில் பல நன்மைகளும் கவனமாகவும் புத்திசாலித் தனமாகவும் பாவிப்பவர்களுக்கான பயன்களும் இருக்க்கின்றன.

கடன் அட்டைகளின் பயன்பாடுகளை பொதுவில் மூன்று வகைப்படுத்தலாம். முதலாவது எமது வருமானத்துக்கும் செலவுக்கும் இடையில் ஏதாவது கால வித்தியாசமிருப்பின் அதனை இவ்வட்டைகளைக் கொண்டு நிவர்த்தி செய்ய முடியும். அதாவது நாளை சம்பளம் வரும் ஆனால் இன்று ஒரு செலவை மேற்கொள்ள வேண்டும் என்றால் அதற்கு இவ்வட்டைகளை உபயோகப்படுத்தலாம். ஆனால் வருமானம் வரும் நேரமும் தொகையும் சரியாகத் தெரிந்து திட்டமிட்டு பயன்படுத்தினால் மட்டுமே அதனால் நன்மை ஏற்படும். இல்லாவிட்டால் வருமானத்துக்கு மீறிய செலவு ஏற்பட்டு வட்டிச்செலவு கையை மீறிவிடும்.

இரண்டாவது பயன் நமது கடன் புள்ளியினை (Credit Score) கட்டியெழுப்புவது. நாம் ஒருபோதுமே கடன் வாங்காதவர்கள் என்று பெருமையாகச் சொல்லி கொள்ளும் காலம் போய் விட்டது. கடன் வாங்கி, அதை மீளக்கட்டிய வரலாறு என்பது வட அமெரிக்காவின் கடன் முறைமையில் நம் ஒவ்வொருவருக்கும் அவசியமாகிறது. அதை ஆரம்பிப்பதற்கும் மிக எளிதாகக் கட்டியெழுப்புவதற்கும் கடன் அட்டைகள் உதவுகின்றன. எதிர்காலத்தில் குறைந்த வட்டியில் நீண்டகால தேவைகளுக்கான வீட்டுக்கடன் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு இது அவசியமாகிறது. கடன் அட்டையினை சரியான முறையில் பாவித்து மாதாந்தம் முழுமையாக மீதிகளைக் கட்டி வரும் போது மட்டுமே நமது கடன் புள்ளியை அதிகரிப்பது சாத்தியமாகிறது.

மூன்றாவது பயன் ஒவ்வொரு கடன் அட்டைகளையும் பொறுத்து வேறுபடும் சலுகைகள், விலைக்குறைப்புக்கள், பரிசுகள் என்பவை சார்ந்தது. உதாரணமாக சினிபிளெக்ஸ் இல் இலவச படம் பார்ப்பதற்கான புள்ளிகளை வழங்கும் கடன் அட்டை ஸ்கோஷியா வங்கியில் வழங்கப்படுகிறது. அதிகம் நீங்கள் பயணம் செய்பவர் என்றால்வான் மைல்களைவழங்கும் அட்டை ஒன்று உங்களுக்கு பயனளிக்கக்கூடும். அது போலவே பல வங்கிக் கடன் அட்டைகள் நாம் செலவிடும் பணத்தின் சிறிய வீதத்தை (1 அல்லது 2 வீதம்) மீள வருட முடிவில் எமக்கு வழங்குகிறது. வியாபார நிறுவனக்களின் அட்டைகள் பொருள் விலைகளில் கழிவினை பலவேளைகளில் வழங்குகின்றன. இவை எல்லாவற்றையும் சரியாக பயன்படுத்தி இலாபமீட்டுவதென்றால் அதற்கு நாம் கடன் அட்டைகளைப் பெறும்போது அது பற்றி முழுமையாக அறிந்து கொண்டு அதற்கேற்ப தொடர்ந்து அவற்றைப் பயன்படுத்தி வந்தால் மட்டுமே முடியும்.

கடன் அட்டைகள் வழங்கும் இந்தப் பயன்பாடுகளை நமக்கு இலாபம் தரும் வகையில் பயன்படுத்துவதற்கான அடிப்படை தூர நோக்குடனான திட்டமிடல் தான். இதுபற்றி மேலும் விரிவாக அடுத்தவாரம் பார்க்கலாம்.

– அரசி

ஈழச் செய்திகள்



சுயநிர்வாக உரிமையுடன் கூடிய சிறுபான்மையினர் பற்றிய சுயாதீன ஆணைக்குழு அரசியலமைப்பில் ஸ்தாபிக்கப்பட வேண்டும்
- ஐ.நா. விசேட அறிக்கையாளர்

ஐ.நா. விசேட அறிக்கையாளர் ரீட்டா ஐஸாக் நாடியா, 'அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய மக்கள் கருத்தறியும் குழுவின் பரிந்துரைக்கு அமைவாக தெளிவான ஆணை, அதிகாரங்கள், வளங்கள் மற்றும் சுயநிர்வாக உரிமை ஆகியவற்றுடன் கூடிய சிறுபான்மையினர் பற்றிய சுயாதீன ஆணைக்குழுவொன்றை அரசியலமைப்பின் கீழ் ஸ்தாபிக்குமாறு நான் அரசாங்கத்திற்கு பரிந்துரை செய்கிறேன்.' எனத்தெரிவித்திருக்கிறார். அத்துடன் இந்த ஆணைக்குழு பல்வேறு ஆற்றல்களை கொண்டிருக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயத்தினை மேற்கொண்டு கடந்த 10 ஆம் திகதி இலங்கை வந்த ஐ.நா.விசேட அறிக்கையாளர், வடக்குகிழக்கு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு விஜயம் செய்தும், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்கைளை மேற்கொண்டு, தனது உத்தியோகபூர்வ விஜயத்தின் இறுதியில், கடந்த வியாழக்கிழமை (ஒக்டோபர்,20) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் போது இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

இதன்போது, அரசாங்கமானது அதனது அரசியல் துணிவாற்றலையும் இலங்கையின் சிறுபான்மையினரை நன்கு பாதுகாப்பதற்கான பொறுப்புணர்வையும் தெளிவாக வெளிப்படுத்துவதற்கு அவசரமானதும் முக்கியமானதும் அதேபோல், உறுதியானதுமான சில நடவடிக்கைகளை முன்வைக்க வேண்டும் எனவும் தெரிவித்திருக்கிறார். மேலும், அரசாங்கமானது உண்மையை கண்டறிதல், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் அதேநேரம், உளவியல் ரீதியான திட்டங்கள், ஆலோசனை வழங்கல் மற்றும் ஆதரவு வழங்கல் பற்றியும் பரிசீலிக்க வேண்டும், யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகங்கள், குறிப்பாக பெண்கள் மேலும் எந்தவொரு தாமதமும் இன்றி விசேடமான உளவியல் ரீதியான ஆதராங்களில் இருந்து அனுகூலமடைய வேண்டியது கட்டயமாகும் எனவும் தெரிவித்திருக்கிறார்.

730 ரூபா நாட்சம்பளம், 300 நாட்கள் வேலை, சம்பள நிலுவை வழங்கப்படமாட்டது
- கூட்டுஒப்பந்தம் கைச்சாத்தனது

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வைத் தீர்மானிக்கும் கூட்டுஒப்பந்தம், கடந்த செவ்வாய்க்கிழமை (ஒக்டோபர்,18) கைச்சாதிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்கள் 1000 ரூபா நாட்சம்பளம், வாரத்தில் 06 நாட்கள் வேலை, 18 மாத நிலுவைப்பணம் வழங்கு ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து தொடர் போராட்டங்களை மேற்கொண்டு வந்தனர். தொழிற்சங்கங்களிற்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையிலான பலசுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன.

எனினும் இறுதியில் தொழிலாளர் கோரிக்கைக்கு மாறாக 730 ரூபா நாட் சம்பளம், 300 நாட்கள் வேலை என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் கூட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. புதிய கூட்டுஒப்பந்தந்தின் அடிப்படையில் அடிப்படைச் சம்பளமாக 500 ரூபாவும், ஊக்குவிப்புக்கொடுப்பனவாக 140 ரூபாவும், 25 நாள் வருகைக்கான கொடுப்பனவாக 60 ரூபாவும், தேயிலை விலைக்கேற்ற கொடுப்பனவாக

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

30 ரூபாவும் என இந்த 730ரூபா சம்பளம் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டு கூட்டுஒப்பந்தந்தின் படி 620 ரூபா சம்பளம் வழங்கப்பட்டு வந்த நிலையில், தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள 730 ரூபா சம்பளம், 100 ரூபாவால் மட்டுமே அதிகரிக்கப்பட்டுள்ளது. அதே வேளை 18 மாத சம்பள நிலுவை வழங்கப் படமாட்டதென முதாளிமார் சம்மேளனம் அறிவித்திருக்கிறது.

இ.தொ.காங்கிரஸ், தொழிற்சங்க கூட்டமைப்பு, இலங்கைத் தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்பவற்றிற்கும் முதலாளிமார் சம்மேளனத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள இவ்வொப்பந்தம் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு பெரும் ஏமாற்றத்தினையே ஏற்படுத்தியிருக்கிறது.

தொடர்ந்தும் சில தோட்டங்களில் போராட்டங்கள் நடாத்தப்பட்டுள்ள அதேவேளை தொழிற்சங்கங்களிற்குஎதிரான கருத்தக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. சில தோட்டங்களில் தொழிற்சங்கங்களிற்கான சந்தாப்பணத்தை இனி வழங்கப் போவதில்லை எனத்தொழிலார்கள் தெரிவித்திருக்கிறார்கள்.



அநுராதபுர அம்மன் ஆலயத் தாக்குதல் : பொலிஸாருக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம்

அநுராதபுரம் தேவநம்பியதிஸ்ஸபுர நீராவியடி முத்துமாரி அம்மன் ஆலயத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டமையைக் கண்டித்து, அநுராதபுரம் பொலிஸ் நிலையத்திற்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

தாக்குதலில் காயமடைந்த இளைஞர் ஒருவர் இன்னமும் அநுராதபுரம் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வரும் நிலையில், கைதுசெய்யப்பட்டவர்கள் பிணையில் விடுவித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் எனக்கோரியும் மக்கள் கடந்த சனிக்கிழமை இந்த



ஆர்ப்பாட்டததைமேற்கொண்டிருந்தனர்.

கடந்த 11 ஆம் திகதி, அநுராதபுரம் தேவநம்பியதிஸ்ஸபுர நீராவியடி முத்துமாரி அம்மன் ஆலயத்திற்குள் நுழைந்த கும்பலொன்று, அம்மன் விக்கிரகங்களை உடைத்தும் ஆலயத்தின் மூல அறையினுள் நின்றிருந்த இளைஞர் ஒருவரை வாளால் வெட்டிக் காயப்படுத்தியுமிருந்தனர்.

இச்சம்பவத்தில் தொடர்புடையவர்களென ஆலய நிர்வாகத்தினரால் குறிப்பிடப்பட்டிருந்த ஏழு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டிருந்த நிலையில், நீதிமன்றத்தினால் பிணை வழங்கப் பட்டிருக்கிறது.

பொலிஸார், நீதிமன்றத்தினூடாக நீதி பெற்றுத்தரப்படும், ஆர்ப்பாட்டங்கள் எதனையும் மேற்கொள்ள வேண்டாம் எனக்கூறியதையடுத்து மக்கள் கலைந்து சென்றுள்ளனர்.

'புதிய யாப்பு முஸ்லிம்களின் இருப்பு மற்றும் பாதுகாப்பிற்கு ஆபத்து! ' - தேசிய சமத்துவ ஒன்றியத்தின் தலைவர் எல்.எம்.யூசுப்.

புதிய யாப்பு முஸ்லிம்களின் இருப்பு பாதுகாப்பிற்கு ஆபத்தானது எனத் தெரிவித்திருக்கிறார் தேசிய சமத்துவ ஒன்றியத்தின் தலைவர் எல்.எம்.யூசுப். அட்டாளச்சேனையில் கடந்த சனிக்கிழமை (ஒக்டோபர்,15) நடைபெற்ற தேசிய சமத்துவ ஒன்றியத்தின் பத்திரிகையாளர் மாநாட்டில் யூசுப் இதனைத் தெரிவித்திருக்கிறார்

பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய யூசுப்,இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், 'வடகிழக்கு இணைப்பானது முஸ்லிம்களுக்கு பாரியளவில் உரிமை இழப்புகளுக்கும் அடக்கு முறைப் பிரயோகத்துக்கும் வழிவகுக்கக்கூடியது. எனவே இந்த விடயத்தில் முஸ்லிம்கள் எந்த வகையிலும் உடன்பட முடியாத நிலை காணப்படுகின்றது. அதுபோன்று அதிகாரப் பகிர்வு விடயத்தில் பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதென்பது முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் மாகாணங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான தீவிரவாதப் போக்குடையவர்களின் அச்சுறுத்தல் அதிகரித்து வரும் வேளையில் அவர்களின் இருப்பு பாதுகாப்பிற்கு ஆபத்தேற்படும் வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் முஸ்லிம்களுக்கு குறிப்பாக கிழக்கில் உரிமைகள் மறுக்கப்படுகின்றது. எனவே இதற்குரிய தீர்வுகளை புதிய யாப்பினூடாக பெறவேண்டும்' எனவும் தெரிவித்தார்.

மேலும், 'புதிய அரசியல் அமைப்பு பற்றி பேசுகின்ற சூழல் உருவாகியுள்ளது. அதனைப் பற்றி அரசியல்வாதிகள் ஆராயாமல் இருப்பது கவலையளிக்கின்றது. இதனால் முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்படுமா என அச்சப்படவேண்டியிருக்கிறது. இதனைக் கருத்தில் எடுத்து அரசியல்வாதிகளுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். இதனை அவர்கள் கருத்தில் எடுக்காது போனால், இதனை மக்களுக்கு எடுத்துக்கூறி அவர்களை ஒன்று திரட்டி அரசாங்கத்துக்கு முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள் விடயங்களை எடுத்துக் கூறவுள்ளோம்' அவர் அங்கு தெரிவித்தார்.

26.10.2016 DEEPAM தீபம்





கனடா மூர்த்தி எழுதும்

நினைத்துப் பார்க்கிறேன்

தீபம் ஏற்றும் தீபாவளி

"மரபுகளின் கொண்டாட்டங்களை குழந்தைகளிடம் ஒப்படைப்பது மிக அவசியமாகும்"

அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்கள். இலங்கையில் வாழ்ந்த காலங்களில் தைப்பொங்கல், புதுவருடப்பிறப்பு, தீபாவளி மூன்றையும் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருப்போம். மூன்று பண்டிகைகளுக்கும் புது உடுப்பு கிடைக்கும். பள்ளிக்கூடம் லீவு கிடைக்கும். வாழ்த்து அட்டைகள் வாங்கி அனுப்புவதில் பிஸியாக இருப்போம். நாமே சொந்தமாக வாழ்த்து அட்டைகள் தயாரித்து அனுப்பிக் கொள்வோம். 'தீபம்' + 'ஆவளி'யே தீபாவளி என்று பள்ளிக்கூடத்தில் சொல்லித்தந்ததால் (ஆவளி என்றால் வரிசை) நாம் தயாரிக்கும் வாழ்த்து அட்டைகளில் தீபம் நிச்சயம் இருக்கும். (அதை வரிசையாக இருப்பதுபோல வரைவதுதான் சலஞ்ச்.) சிவாஜி அல்லது எம்ஜியார் புதுப் படங்களை ரிலீஸ் பண்ணுவார்கள். அப்போது தொலைக்காட்சி இல்லை. இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் கே.எஸ்.ராஜா அட்டகாசம் செய்வார். தைப்பொங்கல்... வருடப்பிறப்பு... தீபாவளி... இந்த மூன்று பண்டிகைக் கொண்டாட்டங்களிலும் தீபாவளி மட்டும் கொஞ்சம் வித்தியாசமான கொண்டாட்டமாக இருக்கும். வெடி, மத்தாப்பூ என்பன வாங்கித்தருவார்கள். பகலில் வெடி. இரவு மத்தாப்பூ. இதைவிட இன்னொன்றும் உண்டு. தீபாவளிக்கு மட்டும் ஆட்டிறைச்சி சமையல் இருக்கும். (பெரியவர்கள் சாராயம்).

தீபாவளி கொண்டாட்டங்கள் குறித்து இன்று பலருக்கும் பலதரப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். தீபாவளி மதம் சார்பான பண்டிகையா அல்லது தமிழ்க் கலாச்சாரத்தை வெளிப்படுத்தும் பண்டிகையா என்ற கேள்விகள் ஒருபுறமாக காலகாலமாக தொடுக்கப்படுகின்றன, இது தமிழரின் பண்டிகையா அல்லது தமிழர்மீது திணிக்கப்பட்ட பண்டிகையா என்ற கேள்விகள்கூட இருக்கின்றன. கேள்விகள் எவையாக இருந்தாலும், நமது தொன்மையான மரபு வழிவந்ததொரு பண்டிகைதான் தீபாவளி என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. சைவ சமயத்தில் மட்டுல்ல, வைணவ சமயம், சீக்கியம் என எல்லா மதங்களுக்கும் 'தீபாவளி' உண்டு. கொண்டாடப்பட அதற்கான ஒரு மதவிளக்கமும் உண்டு. 'நரகாசுரன் என்ற அசுரனை அழித்த தினம்தான் தீபாவளி' என்று நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது திருமாலின் பன்றி அவதாரத்திற்கும், பூமாதேவிக்கும் உருவான சக்தியே நரகன் என்று அழைக்கப்பட்ட நரகாசுரன் என்று சொல்லப்படுகிறது. அந்த 'அசுரன்' யார் என்று பார்த்தால் திருமால் என்ற 'கடவுளின் மகன்'!

நரகாசுரன் கதையோ வேறெந்த புராணக் கதையோ வெறுமனே சமயம் சார்பான கற்பனைக் கதைகள் அல்ல. பொதுவாக சமயம் சார்பான புராணக் கதைகள் புனைகதைகள்போல சும்மா உட்கார்ந்து எழுதப்பட்டதாக இருக்க முடியாது. அவை அவற்றிற்குப் பின்னால் ஏதோ ஒருவகை மரபார்ந்த வாழ்க்கைப் பின்னணி இருக்கும். அவை குறியீட்டு முறையாக உருவாக்கித் தரப்பட்டவையாகவே நிச்சயம் இருக்கும். எந்த ஒரு புராணக் கதைக்கும் உள்ளார்ந்த தத்துவ விளக்கம் இல்லாமல் போகாது. ஒரு வேளை புராணம் சொல்லும் தத்துவ விளக்கம் வேறு தத்துவ விளக்கங்களோடு முரண்படலாம். ஆனால் 'தத்துவ விளக்கம்' என்ற அளவில் அது ஆழமான தொன்மங்களை தன்னகத்தே வைத்ததாக இருக்கும் என்பதை யாரும் மறுக்க முடியாது.

"தீமைக்கும் நன்மைக்குமான போரில் தீமை அழிந்தது" என்று சொல்வதுதான் தீபாவளிக்கான விளக்கம் என்றே வைத்துக் கொண்டாலும், நரகாசுரன் கதையில் நரகாசுரன் பூமாதேவிக்குப் பிறந்தவன் என்று சொல்லும்போது "அவனை ஏன் பூமியின் மகனாக உருவதித்தார்கள்?" என்ற கேள்வி எழுகிறது. பூமியில் இருந்து எழுகின்ற தொற்றுநோய்கள், பேரழிவுகள் என்பவற்றின் உருவகமே நரகாசுரன். அந்த அழிவு சக்தி வேறு எங்கிருந்தும் வரவில்லை. நாம் வணங்கும் ஒன்றில் இருந்தே அதுவும் வந்திருக்கிறது. அதாவது நாம் வணங்கும் ஆக்க சக்திதான் அந்த அழிவு சக்தியையும் பிறக்க வைத்திருக்கிறது என்ற விளக்கமே நரகாசுரன் என்ற உருவகம் என்றுதான் நான் இந்த புராணக் கதையை புரிந்துப் கொள்கிறேன். நரகாசுரன் கதையை இயற்கையோடு ஒன்றியதொரு விளக்கமாகவும் கொள்ளலாம். அதையே அரசியல் விளக்கமாகவும் மாற்றிப் புரிந்து கொள்ளலாம். ஒரு தீய சக்தி, தான் இறக்கும் தினத்தை மக்கள் கொண்டாட வேண்டும் என்பதையும், அதைக்கூட ஒரு வரமாகக் கேட்பதாகவும் உருவகித்தே தீபாவளி மகிழ்ச்சியாகக் கொண்டாடப்படுகின்றது. (தமிழ்ப்படங்களில் வில்லன் கடைசிக் காட்சியில் மன்னிப்புக் கேட்பதுபோல.)

இன்னும் ஒன்றும் உண்டு. அன்றைய காலத்தில் இன்று இருப்பதுபோல மின்சாரம் இல்லை. பெட்ரோல், மண்ணெண்ணெய், டீசல் எரிபொருட்கள் இல்லை. இரவுப் பொழுது சீக்கிரமாகவே ஆரம்பித்துவிடும். மழைக்காலம் என்றால் இரவு இன்னும் சீக்கிரமாக வந்துவிடும். ஆக இருட்டில்தான் அன்றைய வாழ்வின் பாதிக் காலம் போய்கொண்டிருக்கும். அப்படியிருக்க மழைக்காலம் வந்து... அடைமழை பொழிந்தால்... எப்படி இருந்திருக்கும் என்று நினைத்துப் பார்க்கிறேன். அந்த நிலையில் ஒரு மகிழ்ச்சியான ஒரு இரவும் பொழுதை இயற்கை நிலா வெளிச்சத்திலும், செயற்கையாக தீபங்கள், பந்தங்கள் கொழுத்திக் கழிப்பதில் ஒரு உல்லாசம் இருந்திருக்கும்! அந்த இருளைப் போக்க ஒரு தீபம் போதாது. பல தீபங்கள் வேண்டும். அப்படி தீபங்களை வரிசையாக வைத்தாலே ஒரு கொண்டாட்ட மனோநிலை உருவாகிவிடும். அதனால்தான் மழைக்காலம் வரமுன்னர் ஒரு 'கொண்டாட்டத்திற்காக' தீபாவளி பண்டிகை உருவாகியிருக்கிறது.

இராமாயணத்தில், இராமர், இராவணனை அழித்து விட்டு, தனது வனவாசத்தையும் முடித்து விட்டு, மனைவி சீதையுடனும் சகோதரன் இலட்சுமணனுடனும் அயோத்தி திரும்பிய நாளை அயோத்தி மக்கள் ஊரெங்கும் விளக்கேற்றிக் கொண்டாடி மகிழ்ந்தனர். அந்த நாளே தீபாவளி எனக் கொண்டாடப்படுவதாகவும் ஒரு கதை உண்டு.

வரலாற்றுப் பக்கமாகப் பார்த்தால், "சோழர்கள் காலம்வரை தமிழகத்தில் தீபாவளியானது தமிழக மக்களின் அனைத்துத் தரப்பும் கொண்டாடும் கொண்டாட்டமாக இருக்கவில்லை" என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். சோழர் காலத்தில் திருவோணம் பண்டிகையே பெரும் பண்டிகையாக இருந்ததாகவும், சாக்தர்கள் மட்டும்தான் தீபாவளி கொண்டாடினார்கள் என்றும் சைவர்கள் கார்த்திகை தீபம் ஏற்றி மகிழ்ந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. நாயக்கர்கள் காலத்தில்தான் தீபாவளி அரச ஆதரவு பெற்ற நிலைக்கு சென்றதாகவும் சொல்லப்படுகிறது. சிங்கள மக்களிடையே தீபாவளி ஏற்றுக் கொள்ளப்பட இந்த நாயக்க



தொடர்பு காரணமாக இருந்திருக்கலாம்.

நாம் கொண்டாடும் எந்த பண்டிகையும் ஏதோ ஒருவழியில நம் மரபுடன் இணைகிறது. அந்த மரபுச் சங்கிலியில்தான் இன்று நாம் வாழும் காலமும் கொழுவப்பட்டுள்ளது. நமக்குப் பின்னாலும் இந்த மரபுகள் தொடர்ந்து காவிச் செல்லப்படும். அதனால்தான் அதை காவிச் செல்ல நம் மரபுகளின் கொண்டாட்டங்களை எம் குழந்தைகளிடம் ஒப்படைப்பது மிக அவசியமாகும். சுருக்கமாச் சொன்னால், தமிழராக நாம் கொண்டாடிவரும் எந்த ஒரு பண்டிகைகையையும் நம் குழந்தைகளை கொண்டாட வைப்பது நம் தமிழ் மரபின் தொடர்ச்சியை உறுதி செய்யும். அதாவது "என் அப்பாவும் அம்மாவும் என்னைத் தீபாவளி கொண்டாட வைத்தனர்" என்பது மட்டும்தான் இந்தக் கட்டுரையின் முதல் பந்தியில் நான் சொல்லியிருப்பது.

சமந்தாவை கவிழ்க்கும் நயன்!

நீண்டகாலமாக நம்பர் வன் அந்தஸ்தில் நயன்தாரா இருக்கிறார். வயதும் ஏறிக்கொண்டு போகிறது, இளம் நாயகிகளின் படையெடுப்பு அதிகரித்து விட்டது. போட்டி கடுமையாகியுள்ளது. படங்களை குறைத்து தமிழில் மட்டும் கவனம் செலுத்தி வந்த நயன்தாரா தெலுங்குப்பக்கம் கவத்தை செலுத்த ஆரம்பித்துள்ளார். அஜித்தின் வேதாளம் தெலுங்கில் பவன் கல்யாண் நடிப்பில் உருவாகிறது. இதில் சமந்தாவை நாயகியாக்க முயன்றுள்ளனர். சமந்தா இரண்டு கோடியை விட ஒரு சதம் குறைக்க மறுத்துவிட்டார். பின்னர் நயனிடம் வந்துள்ளனர். அவரும் இரண்டு கோடி சொல்லியுள்ளார். பின்னர் சமந்தாவை ஓரங்கட்டுவதற்காக ஒன்றரை கோடிக்கும் குறைவாக குறைத்துள்ளார்.

சாதனைப் படம்!

அரண்டவனுக்கு இருண்டதெல்லாம் பேய் என்ற படத்தை வெறும் பத்து மணித்தியாலத்தில் எடுத்து சாதனை செய்திருக்கிறார்கள். ஆறு கமரா வைத்து, ஒரு காட்சி முடிந்ததும் மற்றைய படப்பிடிப்பு ஆரம்பிக்கும் விதமாக திட்டமிட்டு படத்தை முடித்துள்ளனர். புதிதாக திருமணமான கணவன் மனைவி. மனைவியை பிடிக்காத கணவன் அவளை வீட்டை விட்டு விரட்ட பேய் நாடகம் ஆடுமாறு நண்பர்களிடம் கேட்கிறான். இதற்குள் மாடியில் புதிய ஜோடி குடிவருகிறது. பேயும் புகுந்து விடுகிறது. இறுதியில் என்ன நடந்ததென்பதே கதை. குறைந்த நேரத்தில் படத்தை முடித்து கின்னஸ் சாதனை அனுப்பியுள்ளனர்.

திரும்பி வந்த சமந்தா!

சமந்தா நாகரசதன்யா காதல் விரைவில் திருமணத்தில் முடியப்போவதாக செய்திகள் வந்த நிலையில் அடுத்த வருடத்திங்கு திருமணத்தை தள்ளிவைத்தனர். திருமணத்திங்காக புதிய படங்களை தவிர்த்து வந்த சமந்தா மீண்டும் நடிக்க வந்துள்ளார். இதையடுத்து சிவகார்த்திகேயன், விசால் படங்களில் ஒப்பந்தமாகியுள்ளார். குறைந்தது இன்னும் எட்டு மாதங்களாவது சமந்தா நடிப்பார் என்ற தகவல் வெளியானதையடுத்து அவரை ஒப்பந்தம் செய்ய பலரும் போட்டி போடுகிறார்களாம்.



அஜித்தை உதறிய சிம்பு!

அஜித்திற்கு எவ்வளவு வெறித்தனமான ரசிகராக சிம்பு இருக்கிறார் என்பது ஊரறிந்த செய்தி. அஜித் படம் வெளியானால் முதல் ஆளாக சிம்பு பார்த்துவிடுவார். தனது படங்களில் ஒரு காட்சியிலாவது அஜித் ரசிகன் என்பதை வெளிப்படுத்தி விடுவார். இந்த நிலையில் அண்மையில் சமூக வலைத்தளத்தில் ரசிகர்களுடன் உரையாடிய சிம்பு, இனி படங்களில் அஜித் பெயரை பாவிக்கப் போவதில்லை என கூறியுள்ளார். தற்போது சிம்பு நடிக்கும் அன்பானவன் அசராதவன் அடங்காதவன் படத்தில் அஜித் பற்றிய எந்த பேச்சும் இல்லையாம். மாறாக, இன்னொரு நடிகரின் ரசிகராக நடிக்கிறாராம். அது, தந்தை டி.ஆர்.ராஜேந்தர்!

விஜயை தாக்கிய அமலாபால்!

இயக்குனர் விஜய் அமலாபால் ஜோடி மனமொத்து பிரிவதாக முடிவு செய்து குடும்பநல நீதிமன்றத்தில் மனு செய்துள்ளனர். விவாகரத்து இருவரது வாழ்க்கையையும் பாதிக்காத விதத்தில் தத்தமது வேலைகளில் ஈடுபாடு காட்ட தொடங்கிவிட்டனர். விஜய் இயக்கிய தேவி அண்மையில் வெளியானது. ஜெயம் ரவி படமொன்று விரைவில் ஆரம்பிக்கிறது. அமலாபாலும் படங்களில் ஒப்பந்தமாகிறார். தனுஷின் வடசென்னையில் நாயகியாகியுள்ளார். அண்மையில் நண்பிகளுடன் காஷ்மீருக்கு சுற்றுலா சென்றுள்ளார். அங்கு எடுத்து புகைப்படங்களை வெளியிட்டு குறிப்புக்களும் எழுதியுள்ளார். நோ லுங்கிக் வக் (திரும்பிப்பார்க்க மாட்டேன்), உன் இதயத்தை தன் நெஞ் சில் தாங்கி இருக்கும் ஒருவரை தவிர வேறு ஒருவரையும் உன்னைப்பற்றிய முடிவுகள் எடுக்க அனுமதிக்காதே போன்றவை சில. இவை முன்னாள் கணவன் விஜயை தாக்குவதற்காக எழுதப்பட்டதாக ருவிற்றரில் சர்ச்சை தோன்றி யுள்ளது.





கண்பார்வையை காக்கும் வற்றாளை!

சஹாரா பாலைவனத்துக்குத் தெற்கே உள்ள நாடுகளில் சுமார் எட்டுக் கோடி குழந்தைகள் விற்றமின் ஏ குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவர்களுக்குக் கண்பார்வை இழப்பு முதல் உயிரச்சுறுத்தல் நோய்கள் வரை பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன.

வளர்ந்து வரும் நாடுகளில் விற்றமின் ஏ தறைபாடு அதிகமாக உள்ளது. இதனால் பார்வைக் குறைவு, வளர்ச்சிக் குறைவு, நோய் எதரிப்பு சக்தி குறைபாடு என்பன ஏற்படும். இந்த விற்றமின் ஏ குறைபாட்டினால் 118 நாடுகளில் 140 மில்லியனுக்கும் அதிகமான ஆரம்பப் பாடசாலை மாணவர்களும், 7 மில்லியன்களுக்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்களும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

வற்றாளையில் (சர்க்கரைவள்ளிக்கிழங்கு /sweet potato) அதிகளவு விற்றமின் ஏ உள்ளதையும், இன்னும் விற்றமின் ஏ செறிவூட்டப்பட்ட வற்றாளையை உற்பத்தி செய்யலாம் என்பதையும் இதனால் கண்பார்வைக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்பதையும் இந்த ஆண்டு சிநிமிகிஸி International Potato Center ஐச் சேர்ந்த மருத்துவர்கள் ஆயசயை Andrade, Robert Mwanga மற்றும் Jan Low என்பவர்கள் நிரூபித்து அதற்காக 250,000 அமெரிக்க டொலர்கள் பரிசையும் வென்றுள்ளார்கள்.

ஆரஞ்சு நிற வற்றாளைக் கிழங்கு மூலம் கண்பார்வை தொடர்பான நோய்களைக் குணப்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்த வகைக் கிழங்கின் விளைச்சலை அதிகரிக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஆனால் நாம் அதிகமாக இந்த வற்றாளைக் கிழங்கிற்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. நம் உணவில் உருளைக்கிழங்கைச் சேர்த்துக் கொள்ளும் அளவிற்கு வற்றாளைக்கிழங்கைச் சேர்த்துக் கொள்வது இல்லை. ஆனால் இரண்டு கிழங்குகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, உருளைக்கிழங்கில் 14 மிஹி (International Units) விற்றமின் ஏயும் வற்றாளைக்கிழங்கில் 22,000ஐரு விற்றமின் ஏயும் காணப்படுகிறது. விற்றமின் ஏ வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

அது மாத்திரமன்றி வற்றாளைக்கிழங்கு விற்றமின் சி (நோய் எதிர்ப்பு சக்தி ஐஅஅரநெ ஸலளவநஅ), விற்றமின் பி6 (Metabolism & nervous system), இரும்புச்சத்தும் (Blood cells) போன்றவற்றையும் கொண்டது. குறைந்த கலோரியும் அதிக Fiber உம் கொண்டது. அதனால் குழந்தைகளுக்கு ஏதோ ஒரு விதத்தில் அதிக நன்மை பயக்கும் இக்கிழங்கை உணவோடு சேர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

இந்தக் கிழங்கு இயல்பாகவே இனிப்புச் சுவை கொண்டதால் குழந்தைகளுக்கு இலகுவாக கொடுக்க முடியும். பெற்றோர் சிறிது முயற்சி செய்தால் இது கைகூடும். உருளைக் கிழங்கைப் போல் வற்றாளைக் கிழங்கையும் சிறிய துண்டுகளாகவோ அல்லது நீளமான துண்டுகளாகவோ வெட்டி (Frech Fries போல) பொரித்துக் கொடுக்கலாம். இதில் இனிப்பு சுவை உள்ளதால் அதிக அளவு உப்புப் போடத் தேவையில்லை. அல்லது வெதுப்பல் (டீயமந) செய்து அவர்களுக்கு விருப்பமான பாற்கட்டி (Cheese) வகையோடு கொடுக்கலாம்.

இன்னும் கோதுமை மா கொண்டு செய்யும் உணவு வகைகளில் பாதி மாவுக்குப் பதிலாக அவித்த கிழங்கை மாவோடு சேர்த்து உணவு வகைகளைச் தயாரிக்கலாம். கட்லட், பற்றீஸ் வகையான உணவுகளில் உள்ளீட்டிற்கு இந்தக் கிழங்கை பயன்படுத்தலாம். உருளைக் கிழங்கிற்குப் பதிலாக சாம்பார், கறி வகைகள் செய்யும் போது அதில் வற்றாளைக் கிழங்கைச் சேர்க்கலாம்.

இதில் எனக்குப் பிடித்தமான ஒரு இலகுவான வற்றாளைக் கிழங்கு செய்முறையை உங்களோடு இங்கே பகிர்ந்து கொள்கிறேன்:

இரண்டு அளவான வற்றாளைக் கிழங்கை எடுத்துக் கழுவி தோல் நீக்கி ஓரளவு சிறிய துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதன் பின்பு பாதித் தேங்காயை உடைத்துத் துருவி சிறிது தண்ணீர் விட்டு பிழிந்து முதற் பாலை எடுத்து வைத்து விட்டு, மறுபடியும் தண்ணீர் விட்டுப் பிழிந்து இரண்டாம் பாலையும் எடுத்து வைக்க வேண்டும். வெட்டிய கிழங்குத் துண்டுகளை ஒரு பானையில் இட்டு, சிறிது தண்ணீர் (தண்ணீரில் கிழங்கு முழுவதும் மூடி இருக்க வேண்டும்) சேர்த்து மூடி அவிய விடவேண்டும். கிழங்கு முக்கால் பதமாக அவிந்ததும் பிழிந்து வைத்துள்ள இரண்டாம் பாலை (அரை கப்) சேர்த்துத் துளாவி இன்னும் சிறிது அவிய விடவேண்டும்.

இரண்டாம் பால் விட்டு 5 நிமிடங்களின் பின் முதற் பாலையும் (கால் கப்) சிறிது உப்பையும் (உப்பு தேவையானால் மட்டும்) சேர்த்து அடுப்பில் வைத்துக் கிளறி இறக்க வேண்டும். இனிப்புச் சுவை அதிகம் விரும்புவர்கள் தேவையென்றால் சிறிது சீனிச் சேர்த்துக் கொள்ளலாம். இது பாயாசம் போல அல்லது பாலில் செய்த இராசவள்ளிக் கிழங்கு போல சுவையாக இருக்கும். காலை உணவாகவோ அல்லது மாலைச் சிற்றுண்டியாகவோ உண்டு மகிழலாம்.


இன்னும் பல அருமையான வற்றாளை (சர்க்கரைவள்ளிக் கிழங்கு) உணவு செய்முறைகளை அறிந்து கொள்ள www.foodnetwork.ca இணையத்தளத்திற்குச் சென்று Sweet potato என்று தேடினால் நூற்றுக்கும் அதிகமான செய்முறைகளைக் காணலாம்.

– நிலா. கோ.துரைரத்தினம்

ஒரு இலக்கியக்காரனின் வாழ்பனுபவங்கள் 9



– குப்பிழான்
ஐ.சண்முகன்



அண்மையில் 200 ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாடிய யூனியன் கல்லூரியிலும் நான் படித்தேன். 1959 ஆம் ஆண்டிலிருந்து 1965 ஆவது ஆண்டு வரை 8 ஆம் வகுப்பிலிருந்து க.பொ.த உயர்தரம் வரை அங்கேயே படித்தேன். அங்கிருந்தே பல்கலைக்கழகத்திற்கு தெரிவானேன். அதாவது எனது 13 வயதிலிருந்து 19 ஆவது வயதுவரை எனது பாடசாலை வாழ்க்கை யூனியன் கல்லூரியிலேயே கழிந்தது.

ஒரு மனிதனது வாழ்க்கையில் பதின்ம வயதுக்காலம் எவ்வளவு முக்கியத்துவமானது என நீங்கள் அறிவீர்கள். இவ் புத்திளமைக் காலமே ஒருவனை கட்டமைக்கிறது. ஒருவனின் இலட்சியக் கனவுகளைத் தூண்டுகின்றது. இக்காலத்திலேயே பாலியல் பருவ எழுச்சிகளும் தோற்றம் பெறுகின்றன. ஒருவனுக்குத் தன்னைப் பற்றிய சுய கணிப்பு, ஆளுமை விருத்தி என்பனவும் இக்காலத்திலேயே ஏற்படுகின்றன.

ஏற்கனவே நான் எனது ஆசிரியர்கள் பற்றிக் கூறியிருந்த போதும் எனக்குள் சுயகணிப்பை ஏற்படுத்திய இரண்டு ஆசிரியர்களைப் பற்றி இவ்விடத்தில் கூற வேண்டும். சிதம்பரப்பிள்ளை ரீச்சர் எனக்கு இரு வருடங்களே கற்பித்தார். நான் கலைப்பிரிவிலேயே கற்பதற்குத் தகுதியானவன் என பாடசாலை நிர்வாகம் தீர்மானித்த போது அவர் என்னை

எனது பாடசாலை வாழ்க்கையில் சில ஆசிரியர்கள் பற்றி எதிர்மறையான எண்ணங்களே என்னிடம் இருந்தன. நான் எந்த வகுப்பிலும் எந்த பரீட்சையிலும் தமிழ்மொழிக்கு 65 இற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றதில்லை.

அழைத்து சில புத்திமதிகளைச் சொன்னர். இவ்வளவு படிப்பில் கெட்டித்தனமுள்ள நீ விஞ்ஞானப்பிரிவிலேயே கற்க வேண்டும். நீ விரும்பினால் நான் அதிபருடன் கதைத்து உன்னை விஞ்ஞான பிரிவில் கற்பற்கு ஏற்பாடு செய்து தருகின்றேன். விஞ்ஞான பிரிவில் கற்குமாறு உங்கள் வீட்டில் உன்னை ஒருத்தரும் அறிவுறுத்தவில்லையா? என்றெல்லாம் கேட்டார். தனது ஒரு இளைய சகோதரனைப் போல அரவணைத்து அவர் கூறிய வார்த்தைகள் என்னைப் பற்றிய சுய கணிப்பை என்னுள் ஏற்படுத்தின.

என்றாலும் நான் விஞ்ஞான பிரிவில் கற்கத் தயங்கினேன். ஏனெனில் அப்போது விஞ்ஞான பிரிவிற்கான கற்கைகள் ஆங்கில மொழியிலேயே இருந்தன. நான் ஆங்கில மொழியில் மிகவும் மட்டமானவனாகவே இருந்தேன். ஆங்கிலத்தில் எனது பெயரைக் கூட சரியாக எழுதுவேனோ எனத் தெரியாமல் இருந்தேன். அதனால் தொடர்ந்து கலைப் பிரிவிலேயே கற்பதற்கு முடிவு செய்தேன். ரீச்சருக்கு ஒரு அருமந்த மாணவன் அநியாயமாகப் போகிறான் என்று ஏமாற்றமாக இருந்திருக்கும்.

மேல் 9 ஆம் வகுப்பிலும் அடுத்த வகுப்பிலும் (upper prep) எனக்கு ஆங்கிலம் கற்பித்தவர் சிவநேசன் ஆசிரியர். அவருடைய கற்பித்தல் உத்திகளால் நான் ஆங்கிலத்தில் கணிக்கக் கூடிய ஒருவனாக மாறினேன். சில இடங்களில் சில சந்தர்ப்பங்களில் என்னிடம் இருந்த தயக்கங்கள் பறந்தன. தன்னம்பிக்கையும், எதையும் எதிர்கொள்ள முடியும் என்ற துணிவும் ஏற்பட்டன. என்னைப் பற்றிய சுய கணிப்பு மேலோங்கி இருந்தது.

எனது பாடசாலை வாழ்க்கையில் சில ஆசிரியர்கள் பற்றி எதிர்மறையான எண்ணங்களே என்னிடம் இருந்தன. நான் எந்த வகுப்பிலும் எந்த பரீட்சையிலும் தமிழ்மொழிக்கு 65 இற்குக் குறைந்த புள்ளிகளைப் பெற்றதில்லை. ஆனால் ஒரே ஒரு வகுப்பில் மட்டும் நான் தமிழில் 45 இற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருக்கவில்லை. அந்த வகுப்பில் எனக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர் போடும் உயர்ந்த மட்ட புள்ளி 50 ஐ தாண்டியதே இல்லை. அவர் மீது எனக்கு இனம்புரியாத வெறுப்பு ஏற்பட்டிருந்தது.

அதைப்போலவே இன்னொரு ஆசிரியர் எங்களுக்குவரலாறு பாடம் கற்பித்தார். அவர் வகுப்பிற்கு வந்து மாணவர் ஒருவரிடத்தில் வரலாற்றுப் புத்தகத்தை வாங்கி குறிப்பிட்ட பாடத்தை மாணவர்களைக் கொண்டு வாசிப்பார். 'விதிய பண்டாரம் சிரச்சேதம் செய்யப்பட்டான்' என்ற வாக்கியம் வரும் போது அவர் தன்னிடம் உள்ள புத்தகத்தை கையால் வெட்டி நிலத்தில் தள்ளி வீழ்த்துவார். எங்களில் பலரும் வரலாற்றுப் பாடத்தில் க.பொ.த சாதாரண பரீட்சையில் தோல்வி அடைந்தோம்.

யூனியன் கல்லூரியில் ஒவ்வொரு வருடமும் முதலாம் தவணை முடிவு நாளில் மாணவர்களிடையே சங்கீதப் போட்டி நடைபெறும் 6 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட எல்லா மாணவர்களும் மண்டபத்தில் குழுமி இருக்க போட்டியாளர்கள் மேடைக்கு வந்து பாடுவார்கள். ஆசிரியர்களும் பின்னால் வந்து கவனிப்பார்கள். ஒவ்வொரு வருடமும் இந்த சங்கீதப் போட்டியை ஆவலுடன் எதிர்பார்ப்பேன். அங்கு பாடப்படும் பாடல்களில் இலயித்துப் போவேன்.

எனது வாழ்க்கையில் சங்கீதத்துடனான ஈடுபாடு மிகுந்திருப்பதற்கு இப்போட்டிகளும் ஒரு வகையில் காரணம் என்பேன். அதைப்போலவே ஒவ்வொரு வருடமும் யூனியன் கல்லூரியில் பரிசளிப்பு விழா மிகக் கோலாகலமாக நடைபெறும். பாடசாலை வளாகத்தில் இருந்த மரங்களும் உயர்ந்த கட்டிடங்களும் எல்லாம் வர்ண வர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஒரு முக்கிய பிரமுகர் பிரதம விருந்தினராக வர முன்னிரவில் விழா சிறப்பாக நடந்தேறும். எனது யூனியன் கல்லூரி வாழ்க்கையில் நடந்த எல்லாப் பரிசளிப்பு விழாக்களிலும் ஏதோ ஒரு விதத்தில் எனக்கு பரிசு கிடைத்தது என்பதில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

சங்கீதத்தைப் போலவே உதைப்பந் தாட்டம், கிரிக்கெட் போன்ற விளை யாட்டுகளில் இப்போதும் எனக்கு ஈடுபாடு இருக்கிறது. வார இறுதி நாட்களிலும் பாடசாலை நாட்களின் மாலை வேளையில் நடந்த கிரிக்கெட், உதைப்பந்தாட்டப் போட்டிகள் அவற்றின் மீதான ஈடுபாட்டை எனக்குள் தூண்டின. எங்களது உடற்பயிற்சி பாடவேளைகளில் இவ் விளையாட்டின் நுட்பங்களை ஆசிரியர்கள் எனக்குக் கற்றுத் தந்தனர். மிக முக்கியமாக அந்தக் காலத்திலேயே கல்லூரியில் அந்த டாக் ரூமில் (இருட்டறையில்) படம் காட்டும் கருவி மூலமும் (projector) சிலைட்டுகள் மூலமும் விளையாட்டின் நுட்பங்களை ஈடுபாடுள்ள மாணவர்களுக்குப் பயிற்றுவித்தார்கள்.

எங்கள் கிராமத்திலிருந்து எட்டுப் பத்து மாணவர்கள் குழுக்கள் குழுக்களாகவோ அல்லது தனியாளாகவோ யூனியன் கல்லூரிக்கு நடந்தே செல்வோம். மூன்று நாலு மைல் நீளமான எங்கள் கல்லூரிக் கான நடைப்பயணம் கிராமத்தின் குச்சொழுங்கைகள், தோட்ட வரம்புகள், கோவில் வீதிகள், குளக்கட்டுக்கள் ஊடாக நீண்டு செல்லும் காலையில் பாடசாலைக்குப் போகும் போது அவசரம் அவசரமாக நடப்போம்.

இரண்டு மூன்று நண்பர்கள் சேர்ந்து நடக்கும் போது பாட்டுக்கள் பாடிக்கொண்டோ, கற்பனையில் கதைகளை உருவாக்கி சொல்லிக் கொண்டோ நடந்து செல்வோம். மாலைகளில் வீடுதிரும்பும் போது ஆசுவாசமாக ஆறுதலாக நடப்போம். சிலவேளைகளில் ஐயனார் கோவில் குளத்தில் நீராடுவோம். இப்போது பிரபலமாக இருக்கின்ற ஐயப்பன் கோவிலில் பரந்து விரிகின்ற ஆலமரத்தின் கிளைகளில் விழுதுகளில் ஊஞ்சல் ஆடுவோம். கோவிலின் மிக ஆழமான கிணற்றில் பயந்து பயந்து நீரள்ளிப் போவோம். விளாமரத்திற்குக் கல்லெறிந்து தோட்டக்காரனிடம் பிடிபட்டு கல்பொறுக்குவோம். சமயங்களில் எதிர்ப்படும் கிராமத்து சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடுவோம். பிற்காலத்தில் இலங்கை உதைபந்தாட்ட தேசிய அணியில் இடம்பெற்றிருந்த கட்டுவனைச் சேர்ந்த அப்பையா என்ற வீரனுடனும் நாங்கள் சிறுவயதில் விளையாடி இருக்கின்றோம்.

உங்களில் பலரும் விளாம்பழம், புளியம்பழங்களை சுவைத்து இருப்பீர்கள். ஆனால் நாகதாளிப்பழம், ஆலம்பழம் ஆகியவற்றை சுவைத்திருக்க மாட்டீர்கள். நாங்கள் வரும் வழியில் நாகதாளிப் புதர்களில் பழங்கள் பழுத்து இருந்தால் எப்படியோ அவற்றைப் பிடுங்கி அவற்றில் நடுவிலிருக்கும் முள்ளை கவனமாகத் தவிர்த்து அவற்றின் பழங்களை சுவைத்திருக்கின்றோம். ஒருவித சுவையுடன் வாயெல்லாம் செந்நிறமாக மாறும். அந்தப் பழத்தை நினைத்தால் இப்போதும் வாய் ஊறுகிறது. அத்தடன் ஐயனார் கோவில் ஆலமரம் பழுக்கும் போது ஆலம்பழங்களின் விதையில்லாத தோலுடன் கூடிய சதைப்பகுதியையும் நாங்கள் சுவைப்போம். ஒரு வித இனிப்புக் கலந்த ஆலம்பழத்தின் சுவையையும் நாங்கள் அனுபவிப்போம். சமயங்களில் புளியம் குருத்து, புளியம் பூ, புளியம் பிஞ்சு, என்பவற்றையும் நாங்கள் உண்டு மகிழ்வோம்.

இப்படியாக எங்கள் பாடசாலை கால வழிப்பயணம் இனிமையாகவே கழிந்தது.

இந்தக் கதையையும் உங்களுக்குச் சொல்ல வேண்டும். பாடசாலை காலங்களின் பின் அவ்வவ்போது பழைய பாடசாலை

சங்கீதத்தைப் போலவே உதைப்பந்தாட்டம், கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளில் இப்போதும் எனக்கு ஈடுபாடு இருக்கிறது. வார இறுதி நாட்களிலும் பாடசாலை நாட்களின் மாலை வேளையில் நடந்த கிரிக்கெட், உதைப்பந்தாட்டப் போட்டிகள் அவற்றின் மீதான ஈடுபாட்டை எனக்குள் தூண்டின.

நண்பர்கள், எதிர்ப்படுவார்கள். குசலம் விசாரிப்பார்கள். கட்டியணைத்து கடந்த காலங்களை நினைவு கூறுவோம்.

இவ்வாறே ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவர் எதிர்ப்பட்டார். "எடேய் என்னை நியாபகம் இருக்கிறதா? என்று மிகவும் அந்நியோன்னியமாகக் கேட்டார்". "முகம் நியாபகம் இருக்கு ஆனால் பெயர்தான் நியாபகம் வரவில்லை" எனக் கூறி ஓரளவு கட்டையாக இருந்த அவரின் தோளில் கைபோட்டு அணைத்தேன். "டேய் நான் உனக்கு படிப்பித்த குணசிங்கம் மாஸ்ரரடா" என்றார். நான் வெலவெலத்து ஒரடி பின்வாங்கினேன். அவர் சற்றும் பாதிக் கப்படாது ஒரு புன்சிரிப்புடன் பழைய கலகலப்புடனேயே கதைத்துக் கொண்டிருந்தார்.

(தொடரும்)



பதின்ம வயதுப் பிள்ளைகளுக்கும் உங்களுக்கும் இடையே....

முனைவர் ஹெயிம் ஜி. ஜினோட்

'குழந்தைகளுக்கும் உங்களுக்கும் இடையே' என்ற தலைப்பில், முனைவர் ஹெயிம் ஜி.ஜினோட் (1922-1973) எழுதிய 'Between Parent and Child' என்ற உலகப் பிரசித்தி பெற்ற நூல் 90 களில் மொழி பெயர்க்கப்பட்டு சரிநிகர் பத்திரிகையில் தொடராக வெளிவந்த போது பலத்த வரவேற்பைப் பெற்றிருந்தது. அதன்பிறகு அது நூலாகவும் மூன்றாவது மனிதன் வெளியீட்டகத்தினால் வெளியிடப்பட்டது. (மூன்றாவது மனிதன் பதிப்பகத்தால் இரண்டு பதிப்புக்கள் வெளியிடப்பட்ட அந்த நூல் விற்பனையில் இல்லாத நிலையில், இலங்கையிலுள்ள குமரன் பதிப்பகம் இப்போது, பதிப்பாளருக்கோ, மொழிபெயர்ப்பாளருக்கோ தெரியப்படுத்தாமலே அதன் இன்னொரு பதிப்பை அச்சிட்டு விற்பனை செய்து வருகிறது என்பது மேலதிக தகவல்). இந்த வரிசையில் அவர் எழுதிய 'Between Parent and Teenager', 'Teacher and Child' என்ற நூல்களும் இது போலவே உலகப் பிரசித்தமானவை. அவரது 'Between Parents and Teenager' என்ற நூலின் மொழிபெயர்ப்பை, அதன் முக்கியத்துவம் கருதி தமிழில் தருவதில் மகிழ்ச்சியடைகிறோம். பதின்மவயதுப் பிள்ளைகளுடனான நல்லுறவை பேணுவதற்கு அவசியமான பயனுள்ள பல தகவல்களையும் ஆலோசனைகளையும் தரும் இந்நூல் பெற்றோர்களுக்கு, குறிப்பாக, அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் சூழலில் வாழும் தமிழ் பெற்றோர்களுக்கு பெரிதும் பயன்தரும் என நம்புகிறோம். (ஆர்)

நூலாசிரியர் முன்னுரை

எல்லாப் பெற்றோர்களுக்கும் தமது வாழ்வில், 'எனது குழந்தை இனிமேலும் ஒரு குழந்தை அல்ல' என்ற உண்மை திடீரென உறைக்கும் ஒருநாள் வந்தே தீரும். ஒரே நேரத்தில் மகிழ்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்துகின்ற ஒரு தனித்துவமான

- தமிழில்: எஸ்.கே.விக்னேஸ்வரன்

தருணம் அது. எமது விதை முளைவிடத் தொடங்கிவிட்டது என்பதை உணர்வதால் ஏற்படும் மகிழ்ச்சி ஒருபுறம். மறுபுறம் இனிமேலும் எம்மால் அவனையோ அவளையோ எல்லாவற்றிலிருந்தும் பாதுகாகாக்க முடியப்போவதில்லை என்ற ஒருவகை அச்சம் கலந்த தவிப்பு. இனிமேல் நாங்கள் அவர்களுக்கும் இந்த உலகுக்கும் இடையில் நின்று வாழ்வின் ஆபத்துக்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்க முடியாது. அந்தக் கணத்திலிருந்தே, அவர்கள் தமக்கு வரும் தவிர்க்க முடியாத சவால்களையெல்லாம் எங்களைக் கலந்து கொள்ளாமலே தனியாக எதிர்கொண்டு ஆகவேண்டும்.

இந்த இடத்தில் முரண் நிலைகள் உருவாகின்றன. பெற்றோர்கள் என்ற முறையில் நாம் அவர்களுக்குத் தேவைப் படவேண்டும் என்பது எங்களது தேவையாக உள்ளது. ஆனால்,பதின்ம வயதினர் என்ற முறையில் அவர்களது தேவையோ, நாங்கள் தேவைப்படக் கூடாது என்பது. இந்த முரண்பாடு யதார்த்தமானது: நாம் விரும்பும் எமது பிள்ளைகள் எங்களிடமிருந்து சுதந்திரமாகப் போகத் துணிகையில் நாம் இதை உணர்கிறோம்.

இது எமது வாழ்வின் உன்னதமான தருணமாகவும் இருக்கமுடியும். நாம் கையில் வைத்திருக்க விரும்பும் ஒன்றைப் போக விடுவதற்கு, உயர்ந்தளவு பரந்த மனமும் அன்பும் வேண்டும். பெற்றோர்களுக்கு மட்டும்தான் இத்தகைய, துயர்நிறைந்த பெருந்தன்மையைக் கொண்டிருக்க முடியும்.'

அத்தியாயம்1 நாங்களும் அவர்களும்

எங்களது அக்கறைகளும் அவர்களது தேவைகளும்.

அன்டியின் அம்மா இப்படிச் சொல்கிறார்: "என்னுடைய தேவையெல்லாம், எனது மகன் பாதுகாப்பாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பதுதான்"


பதின்நாலு வயது அன்டி சொல்கிறான்: "என்னுடைய மகிழ்ச்சியைப் பற்றி கதைப்பதை அவ நிப்பாட்டவேணும். அதுதான் எனக்குத் தேவை. அவதான் எனது வாழ்க்கையையே மோசமாக்குகிற ஆள். அவ முணுமுணுக்கிறதும் கவலைப்படுறதும் தான் எனக்கு விசர் வரப் பண்ணுது."


ஜோயின் அம்மா இப்படிச் சொல்கிறார்: "அவள் வெளிமாகாணத்திலை இருக்கிற கல்லூரிக்குப் படிக்கப் போறதைப் பாக்க எனக்குச் செத்திடலாம் போலை இருக்கு. அவள் சரியான சின்னப் பிள்ளை. அவளை நினைச்சு நான் எவ்வளவு கவலைப்படுறன். அவள் மட்டுந்தானே எனக்கு இருக்கிறாள்."


பதினெட்டு வயதான ஜோய் சொல்கிறாள்: "அம்மா என்ரை வாழ்க்கையை, எனக்காக தான் வாழ விரும்புறா. முடிந்தால் அவ எனக்காக சுவாசிக்கவும் செய்வா....அவ நினைக்கிறா..நான் ஏதோ ஒரு சீனிமிட்டாய் போலை..அவ வந்து எனக்குக் குடை பிடிக்காவிட்டால், பெய்யுற மழையிலை நான் கரைஞ்சு போடுவன் எண்டு. என்ரை வாழ்க்கையை நான் வாழுறதுக்கு அவ விடவேணும்..அது தான் என்ரை விருப்பம்."

ஆர்னோல்டின் அப்பா இப்படிச் சொல்கிறார்:" என்னுடைய மகன்

தொடர்ச்சி அடுத்த பக்கம்...







தன்ரை வாழ்க்கையிலை முன்னுக்கு வாறதுக்காக நான் எதுவும் செய்வன்"

பதினாறு வயதான மகன் ஆர்னோல்டோ இப்படிச் சொல்கிறான்: 'அப்பாவின்ரை ஆலோசனைகளைக் கேட்டு எனக்குப் வேண்டாமெண்டு போயிட்டுது. எப்ப பாத்தாலும் அவர் என்ரை எதிர்காலத்தைப் பற்றித்தான் கதைக்கிறார். இதாலை என்ரை நிகழ் காலத்தை நாசமாக்கிக் கொண்டிருக்கிறார். எனக்கு என்னைப்பற்றி எந்தப் பற்றுறுதியான நம்பிக்கையும் இல்லாமல் இருக்கு. ஒரு தோற்றுப் போன ஒருவனாக நான் என்னை உணர்கிறன்.

எங்களது பயங்களும்
அவர்களது உணர்வுகளும்

லேனார்டின் அம்மா இப்படிச் சொல்கிறார்:" எனது மகனை நினைச்சால் எனக்கு ஒரே கவலை. அவன் தன்னைச் சரியாகக் கவனிக்கிறானில்லை. கவனமில்லாமல் இருக்கிறான். எப்பவும் ஒரு வருத்தக் காறப் பிள்ளையாத்தான் இருக்கிறான்."

பதினாறு வயதான லேனாட்டோ இப்படிச் சொல்கிறான்: "அம்மாவுக்கு தான் ஒரு டொக்ரர் எண்ட நினைப்பு. அவ என்னை வருத்தக் காறனாக்கிறா.



அவ செய்யிறதுகளாலை நான் களைச்சுப் போனன். நான் இருமிக் கேட்டாலோ. அல்லது என்ரை மூக்கைத் துடைச்சதை கண்டாலோ அவ ஒரு ஓட்ட வீராங்கனையாக மாறியிடுவா. நான் நிலக்கீழ் அறையிலிருந்து தும்மினால், அவ ஹோலுக்கை இருந்து ஓடி வருவா.

"கடவுள் காக்க..மகனே"

"என்ன நடந்தது..ராத்திரி உனக்குக் குளிர் பிடிச்சுப் போட்டுதா?"

"எங்கை ஒருக்காப் பாப்பம் உன்னை... இஞ்சை வா."

"நீ உன்னை வடிவாக் கவனிக்கிறாயில்லை"

"நீ உப்பிடி கனக்க நேரம் வெளியிலை நிக்கக் கூடாது.."

"ஒரு ஹெலிக்கப்ரரைப் போல எனக்கு மேலை பறப்பா....அவவின்ரை சத்தமும் சூடான மூச்சும் எனக்கு வேண்டாமென்று போயிட்டுது. நான் நினைக்கிறன், எந்த விளக்கத்தையும் ஆருக்கும் குடுக்கவேண்டிய தேவையில்லாமலே தும்முறதுக்கான உரிமை எனக்கு இருக்கிறது எண்டு."

அன்ரனியின் அம்மா மிகவும் கவலையும் ஆத்திரமும் கொண்டவளாக இருந்தார்: "எனது மகன் ஒரு விருந்துக்குப் போக வெளிக்கிடுறான். 'சந்தோசமாப் போயிட்டு வா மகன். ஆனால் பொறுப்பா நடந்துகொள்' எண்டு நான் சொன்னன். அவன் ஏதோ நான் தன்னைப் தாக்கிப் பேசினதைப் போல என்னை நிமிர்ந்து பாத்துவிட்டு, இறுக்கமான குரலில், 'நான் என்ன செய்ய வேணுமெண்டு நீ எனக்குச் சொல்லத் தேவையில்லை' எண்டு சொல்லுறான். இப்பெல்லாம் அவனுக்கு ஹலோ சொல்லுவது கூட பாதுகாப்பானதில்லை போல தெரியுது"

இதற்கு, பதினைந்து வயது அன்ரனி சொல்கிறான், "அம்மா எனக்கு எரிச்சலூட்டுறா.. அவ என்ன ஒரு சின்னப் பிள்ளை போல நடத்துறா..

"பொறுப்பா நடந்துகொள்", "நிமிர்ந்து நில்", "காலை இழுத்து இழுத்து நடக்காதை", "உன்ரை கைக்குட்டையைப் பாவி" "உன்ரை சூப்பை சத்தங் கேக்க உறிஞ்சாதை" என்று இப்பிடி ஒரு கண்டிப்பான விளையாட்டுப் பயிற்றுனர் மாதிரி நடந்து கொள்ளுறதை அம்மா நிப்பாட்ட்ட வேணும்"

ஒரு இணைந்த வாழ்க்கை சாத்தியமா?.

இந்தப் பெற்றோர்களது நல்ல நோக்கத்தை யாரும் சந்தேகிக்க முடியாது: அவர்கள் தங்களது பிள்ளைகள் சந்தோசமாகவும் ஆரோக்கியமாகவும் பாதுகாப்பாகவும் வாழ்வதைக் காணவே விரும்புகிறார்கள். ஆனால், அனேகமான சந்தர்ப்பங்களில், அவர்களது முயற்சிகள் பாராட்டப் படுவதில்லை; அவர்களது அன்புக்குப் பதிலான ஆதரவு கிடைப்பதில்லை. பதின்மவயதினர், அவர்கள் கேட்காமல் காட்டப்படும் அக்கறையையோ, ஆலோசனையையோ விரும்புவதில்லை. அவர்கள் தம்மை வளர்ந்தவர்களாக காட்டிக் கொள்ளவே விரும்புகிறார்கள். தங்களது பாதையை பெற்றோரின் வழிகாட்டல் இல்லாமல் தாமே கண்டுகொள்வதற்கான தகுதி தமக்கு இருப்பதாக உணரவே அவர்கள் விரும்புகிறார்கள். கடன் தேவைப்படும் நிலையில் உள்ள ஒருவர், தான் பொருளாதார ரீதியில் சுதந்திரமாக இருக்க விரும்புவது போன்ற ஒரு நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். பெற்றோர்கள் என்ற வங்கி எவ்வளவுதான் அவர்களுக்கு அனுசரணையாக இருந்தாலும், பதின்ம வயதுக் கடன் எடுப்போர், அதற்குப் பதிலாக கொடுக்கப்பட வேண்டிய வட்டி குறித்து மகிழ்ச்சியற்றவர்களாகவே இருப்பர். அவர்களுக்கு உதவிகள் தலையீடாகவும், அக்கறை காட்டல், குழந்தையாக நடாத்துவது போலவும், ஆலோசனைகள் அதிகாரம் செலுத்துவது போலவும் தெரியும். சுயாதீனமாக இருக்க விடுதல் அச்சமூட்டுவதாக இருப்பினும், எல்லவற்றையும் விட மதிப்புவாய்ந்ததாக இருக்கும். இதில் தலையிடும் எவரும் எதிரிகளே!.

பதின்ம வயதினரின் பெற்றோர்கள் ஒரு நெருக்கடிமிக்க துவித நிலையில் உள்ளனர்: உதவி செய்தல் அவர்களை மகிழ்ச்சியற்றதாக்கும் நிலையை உருவாக்குகையில் உதவுவது எப்படி?; வழிகாட்டல்கள் நிராகரிக்கப்படும் போது எப்படி வழிகாட்டுவது? அக்கறை காட்டல் ஒரு தாக்குதலாகக் கொள்ளப்படும் போது எப்படி உரையாடுவது?

பதினைந்து வயதான அல்வினின் தந்தை இப்படிச் சொல்கிறார்: "எனது மகனுடனான எனது உறவு சோகமயமானது, தவறுகள் நிறைந்தது. நான் அவனது நண்பன்.ஆனால் அவன் என்னை எதிரியாகப் நினைக்கிறான். நான் அவன் என்னை மதிக்க வேண்டும் என்று விரும்புகிறேன். ஆனால் அவனிடமிருந்து எனக்குக் கிடைப்பதோ, இகழ்ச்சி மட்டுமே.

பதின்ம வதினரும், பெற்றோரும் ஒன்றாக, சமாதானமாகவும் பரஸ்பர கவுரவத்துடனும் வாழ முடியுமா? ஆம். ஆனால் சில நிபந்தனைகளின் கீழ் மட்டும் அது சாத்தியம். அந்த நிபந்தனைகள் எவை?. இந்த நூல், சமாதானத்துக்கான பாதையை நெருங்கிச் செல்ல உதவுகிறது. பதின்ம வயதினரும் பெற்றோரும் இணைந்து வாழ்தலுக்கான நிபந்தனைகள், சேர்ந்து பரஸ்பர மதிப்புடனும் கவுரவத்துடனும், வாழ்வதற்கான வழி முறைகள் பற்றி உரையாடுகிறது. *(தொடரும்)*



குழந்தைப் போராளி

சைனா கெயரெற்சி
தமிழில்: தேவா

அப்பாவின் கண்களில் நான் அச்சத்தைப் பார்த்தேன். மிகவும் சிறு வயதினளான நான் கூட ஆட்கள் கடத்தப்படுவது பற்றிக் கேள்விப்பட்டிருந்தேன். அப்பாவிற்கு என்ன நடந்தாலும் எனக்குக் கவலையில்லை. என்னைப் பொறுத்தவரை அவர் தண்டிக்கப்பட வேண்டியவர் குறிப்பாக ஹெலனுடன் அவர் நடந்துகொண்ட விதத்திற்காக அவர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். வந்த இருவரில் ஒருவரைக் கவனித்தேன். அவர் தனது கண்களை இடைவிடாமல் சிமிட்டிக் கொண்டிருந்தார். அவரின் கண்கள் அவரின் கட்டுப்பாட்டிலில்லை. இது அவரை அவ்வளவு நம்பகரமானவராகக் காட்டவில்லை.

அப்பா அவர்களோடு முண்டி விட்டார். "என்னை நீங்கள் இந்த இடத்திலேயே கொன்று போட்டாலும் கவலையில்லை. என்னால் உங்களுடன் வர முடியாது" என அப்பா விறைத்துக்கொண்டு நின்றார். வந்த மனிதர்கள் இதை எதிர்பார்க்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாது சிறிது நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள்வீட்டைவிட்டுவெளியேறும்போது தாங்கள் இராணுவத்தினருடன் திரும்பி வருவதாக மிரட்டிவிட்டுப் போனார்கள். அவர்கள் அங்கிருந்து சென்றதும் அப்பா வாழைத் தோட்டத்திற்குள் சென்று மறைந்தார். விரைவாகவே அவர் சில இராணுவ வீரர்களுடன் திரும்பி வந்தார்.

அவர்கள் எங்களிலிருந்து மாறுபட்ட உடலமைப்பைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அந்த இராணுவ வீரர்கள் வடக்கிலிருந்து வந்திருந்தார்கள். அவர்களது கண்கள் சிவப்பாகவும் அவர்களின் சருமம் அட்டைக் கறுப்பாகவுமிருந்தது . எங்கள் வாழ்க்கை முறையில் விவசாயமும் பண்ணை வாழ்வும் முக்கியமானது போல அவர்களுக்கு இராணுவ சேவையே வாழ்க்கை முறையாக இருந்தது. எங்களை அவர்கள் "பால் குடிக்கும் சோம்பேறிகள்" என ஏளனம் செய்வார்கள். அவர்கள் ஒரு விநோதமான மொழியில் தங்களுக்குள் பேசிக்கொண்டனர். எங்கள் தோட்டத்தில் பறித்த மிளகாய்ப் பிஞ்சுகளைகளை அவர்கள் வாயில் போட்டு மென்றதைக் கண்ட போது என் கண்களை நான் இறுக மூடிக்கொண்டேன்.

இச்சம்பவத்தின் பின்னர் வடக்கிலிருந்து வந்தவர்களுக்கு அப்பா ஒழுங்காகக் கப்பம் கட்டிக்கொண்டிருந்தார். புதினமான தோற்ற முடைய இராவணுத்தினரைக் கண்டதிலிருந்து எனது கற்பனை புதிய தளங்களுக்குத் தாவத் தொடங்கிவிட்டது. அப்போது கூட இப்படியான இராணுவ உடையை நானும் ஒரு நாள் அணியப்போகிறேன் என்று நான் கனவிற் கூட நினைத்ததில்லை.

ஹெலன் எங்களை விட்டுப் பிரிந்தும், அம்மாவைத் தேடிச் சென்றும் ஒரு வாரமாகிவிட்டது. அவளை மீண்டும் காண்பேனென்று நான் எண்ணியிருக்கவில்லை. ஆனால் அவள் மீண்டும் வந்து சேர்ந்தாள். அவள் அம்மாவைக் கண்டாளா? என்ற கேள்விக்கு அவள் முகத்திலேயே பதிலிருந்தது. தோல்வி துல்லியமாகவே அவளின் முகத்தில் தெரிந்தது. அவளின் முயற்சியும் பலனின்றிப் போயிற்று. பற்றிசியா நாட்டை விட்டு வெளியேறியிருந்தார். அவர் எப்போது திரும்பி வருவாரென்று யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஹெலன் முற்றோனுடனும் யூடித்துடனும் சிறிது காலம் பற்றிசியாவிற்காக் காத்திருந்துவிட்டுத் திரும்பி வந்திருக்கிறாள். இம் மறுமொழியைக் கேட்டதும் எனக்கு ஆத்திரம் பொங்கியது. "உதவி தேவையென்றால் கூனிக் குறுகிக் கொண்டு மீண்டும் வருவார்கள்" என்ற அப்பாவின் சொற்கள் என் நினைவில் வந்தன.

" நீ ஒரு நாயைப் போல இங்கே தான் சுற்றிச் சுற்றி வருவாய் என்பது எனக்குத் தெரியும்" என அப்பா ஹெலனைப் பழிக்க ஹெலன் தலையைக் குனிந்தவாறிருந்தாள். ஒரு துயரப் புன்னகை அவளின் உதடுகளில் நெளிந்தது. ஆனால் அப்பா இன்னும் தனது உரையை முடிக்கவில்லை.

"நீஎங்கும் போகலாம், ஆனால் எப்போதும் இங்கு தான் திரும்பி வரவேண்டும். உனக்கு வேறு கதியில்லை வீடென்று உனக்கிருப்பது இது ஒன்றுதான்." எனது சகோதரிகள் வீட்டை விட்டுப் போனால் அப்பாவிற்கு எந்தக் கவலையுமில்லை. ஆனால் அவர்கள் திரும்பி வந்தால் எந்த வழியிலாவது அவர்களைப் பழிவாங்கியே தீருவார்.

இரண்டு நாட்கள் எந்தவிதச் சச்சரவுகளுமின்றிக் கழிந்தன. மூன்றாவது நாள் ஒரு புகைப்படக்காரர் வீட்டிற்கு வந்திருந்தார். நான் ஹெலனிடம் நானும் அவளும் எனது சிற்றன்னை பெற்ற சகோதரிகளுமாகச் சேர்ந்து ஒரு புகைப்படம் எடுத்துக் கொள்வோமா எனக் கேட்டேன். இதுவரை நான் புகைப்படமெடுத்துக் கொண்டதேயில்லை. படத்தில் நான் எவ்வாறு இருப்பேனென்று பார்க்கவும் எனக்கு ஆவலாயிருந்தது. ஆனால் நிலைமை வேறுமாதிரியாக இருந்தது. புகைப்படக்காரர் ஹெலனை மட்டுமே படம் பிடித்தார். புகைப்படக்காரர் போனதுமே அப்பா தனது நண்பரின் மகனொருவன் ஹெலனை மணக்க விரும்புவதாக ஒரு செய்தியைச் சொன்னார்.

தொடரும்...



கனடாவும் அகதிகளும்

கடந்த வார இதழிலே கனடாவின் கிழக்குக் கரையோர மாகாணமான நோவஸ்கோசியா மாகாணத்திற்கு கப்பல் ஒன்றிலே வந்த சேர்ந்த சீக்கிய அகதிகள் பற்றியும், அவர்களைக் குறித்து அன்றைய கனேடிய அரசு எடுத்த நடவடிக்கை பற்றியும் பார்த்தோம். ஆனால் இக்கப்பலின் வருகைக்குக்கு மூன்று மாதங்கள் முன்னதாக, கனடாவில் அகதிகளை உள்வாங்குவதிலும், அவர்களின் வழக்குகளை விசாரிப்பதிலும் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை அன்றைய கனேடிய அரசு கொண்டுவந்திருந்தது.

ஆண்டாண்டு காலமாக அகதிகளாக கனடாவிற்கு வந்தவர்களுடைய வழக்குகள் உரிய நேரத்திலே தீர்த்துவைக்கப்படாமல், நிலுவையிலே நீடித்திருந்ததும்தான் கனடாவில்தொடர்ச்சியாகநடந்துகொண்டிருந்தது. ஆனால் இதை முற்றிலும் மாற்றும் விதமாக மல்ரோனி அவர்களின் அரசு 1986ம் ஆண்டிலிருந்து சில நடவடிக்கைகளை எடுக்கத்தொடங்கியது. அவற்றிலே முதன்மையானதும் முக்கியமானதுமான நடவடிக்கையாக, 1986ம் ஆண்டு நிலுவையிலே இருந்த பல்லாயிரக்கணக்கான அகதிகளின் வழக்குகளை விசாரிப்பதற்கு அவர்கள் கொண்டுவந்த Administrative Review Programme என்ற திட்டத்தை குறிப்பிடலாம். இந்தத் திட்டத்தின் மூலம், 1986ம் ஆண்டு மே மாதம் 21ந்தேதிக்கு முன்னர் கனடாவில் கால் பதித்த பல்லாயிரக்கணக்கான அகதிகளுக்கு நிரந்தர வதிவிட உரிமை கிட்டியது. ஏறத்தாழ 28,000 அகதிகளின் கோப்புக்கள் பரிசீலிக்கப்பட்டு, அதிலே 85 வீதமானோர் நிரந்தவதிவிட உரிமை பெற்றனர். இதைப்பற்றி நாம் கடந்த இதழிலும் குறிப்பிட்டிருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

இப்படி வழக்குகளை துரிதப்படுத்தனாலும், மீண்டும் மீண்டும் அகதிகள் வருவதனால் அகதிகளின் கோப்புக்களும் அதிகரிக்க ஆரம்பித்தன. இவை எல்லாவற்றையும் கருத்தில் கொண்டே கனடா வரும் அகதிகளுக்கும், கனடாவுக்கு கொண்டு வரப்படும் அகதிகளுக்;கும் ஒரு சரியான அமைப்பு அவசியம் என்று கருதி, மல்ரோனி அரசு பில் சி 55 என்கின்ற மசோதா மூலம், இன்று கனடாவில் காணப்படும் குடிவரவு அகதிகள் சபையை உருவாக்க பாராளுமன்றத்தில் ஒரு நகர்வை மேற்கொண்டது.

கனடா வரும் அகதிகள் இரண்டு கட்டங்களாக விசாரணைகளுக்கு முகம் கொடுக்க வேண்டும்என்று அதில்தீர்மானிக்கப்பட்டது. கனடா வரும் அகதிகள் கனடாவில் அகதிநிலை கோரிக்கைக்கு உரித்துடையவர்களாக இருக்க வேண்டும் என்றும், அப்படி உரித்துடையவர்களாக இருக்கும் பட்சத்திலேயேதான் அவர்கள் கனடாவிலே அகதிக் கோரிக்கைக்கு விண்ணப்பிக்க முடியும் என்றும் அந்த மசோதா தெட்டத் தெளிவாக எடுத்தியம்பியது,




இவையெல்லாவற்றையும்விட கனடாவிற்கு வரும் ஒரு அகதி, ஒரு மூன்றாவது பாதுகாப்பான நாட்டின் மூலமாக கனடாவிற்குள் பிரவேசிப்பாரேயாயின் அவருக்குக் கனடாவிலே அகதி அந்தஸ்த்து கோரும் வாய்ப்பு மறுக்கப்பட வேண்டும் என்றும் அந்த மசோதா சொல்லியது.

ஒட்டு மொத்தத்திலே அகதிகள் சம்பந்தமாக கனேடியச் சட்டத்தில் இருந்த பல விதிகள் இறுக்கப்பட்டன என்பதுதான் உண்மை. அந்த மசோதா பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்ட போது, இதிலிருந்த சட்ட விதிகளைக் கண்டித்து அகதிகளுக்காக குரல் கொடுக்கும் பல நிறுவனங்களும், சட்ட வல்லுனர்களும் இந்த மசோதாவுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கினர். எழுந்தமானமாகப் பார்க்கும்போது, அகதிகளின் வருகையையும், அவர்கள் கனடாவிலே உள்வாங்கப்படுவதையும் துரிதப்படுத்துவதற்காக இச்சட்டம் கொண்டுவரப்பட்டதுபோல தோன்றினாலும், இந்த மசோதா பாராளுமன்றத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு சட்டமாக்கப்படும்போது இதனுடைய பல உள் சரத்துக்கள் அகதிகளுக்கு எதிராகவே இருக்கும் என்று அகதிகளுக்காக குரல் கொடுக்கும் நிறுவனங்கள் வாதிட்டன.

இப்படி அகதிகளை கனடாவில் உள்வாங்குவது சம்பந்தமான வாதப்பிரதிவாதங்கள் நடந்து கொண்டிருந்தபோதுதான் நம் கடந்த இதழில் பார்த்தவாறு பல சீக்கிய இனத்தவரைத் தாங்கிக் கொண்டு அகதிக் கப்பல் ஒன்று நோவஸ்கோசியாவை வந்தடைந்தது. ஏற்கனவே மசோதா சி55இனால் அமளிப்பட்டுக்கொண்டிருந்த பாராளுமன்றத்திலே மேலும் சூடான விவாதங்களை இந்த சீக்கிய மக்களின் கப்பல் உருவாக்கியது.

நாம் கடந்த இதழில் பார்த்தவாறு கடல் வழியாக வரும் அகதிகளைக் கட்டுப்படுத்த இன்னொரு சட்டமும் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டது. அகதிகளைக் கட்டுப் படுத்துவது தடுப்பக்காவல் சட்டம் என்று அழைக்கப்பட்ட அந்த சட்டம்தான் பில் சி 84. பில் சி 84 மிகத் துரித கதியிலே 1987ம் ஆண்டு, கனடியப் பாராளுமன்றத்திலே சமர்ப்பிக்கப்பட்டது. கனடியப் பாராளுமன்ற வரலாற்றிலேயே அகதிகளின் வருகையைக் குறித்தும், கனடாவிலே அவர்களைஎப்படிக்கையாளவேண்டும்என்றஅரச நடை முறைகள் குறித்தும் இரு சட்டங்கள் அடுக்கடுக்காக சமர்ப்பிக்கப்பட்டது 1987ம் ஆண்டு என்றே சொல்லப்பட வேண்டும்.

இந்த இரு சட்ட மசோதாக்களிலும், பில் சி 84, பில் சி55ஐ விட மிக இறுக்கமானதும் கடுமையானதுமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது என்று அகதிகளின் நலன் பேணும் குழுக்கள் போர்க்குரல் எழுப்பினர். இந்த எதிர்ப்புக்கள் காரணமாக இந்த இரு சட்ட மசோதாக்களும், சட்டமாவதற்கு பாராளுமன்றத்தில் நீண்ட காலம் எடுத்தது. ஆனால் ஈற்றிலே அரசினுடைய சட்ட மசோதாக்கள், பாராளுமன்றத்திலே ஏற்றுக் கொள்ளப்பட்டு கனடாவில் சட்டமாக்கப் பட்டது. இந்த சட்டங்கள் அரசு எதிர்பார்த்தபடி அகதிகளின் வருகையை கட்டுப்படுத்தியதா அதன் பலாபலன்கள் என்ன என்பதை அடுத்த இதழிலே பார்க்கலாம்



– டேவிட் பூபாலபிள்ளை



ஃப்ராங் வொரெல் (Sir. Frank Worrell)

மேற்கிந்தியத்தீவுகள்: கலிப்சோவிலிருந்து கலிப்சோவுக்கு–6

1948 இல் இங்கிலாந்துக்கெதிரான தொடரில் அறிமுகமாகிய மூன்று "W"க்களில் மூன்றாமவரும், சமமானவர்களின் முதன்மையானவரும் என்றால் சேர். ஃப்ராங் வொரெல் அவர்களைக் குறிப்பிடலாம். அறிமுகமான முதற்போட்டியின் முதல் ஆட்டவாய்ப்பிலேயே 97 ஓட்டங்களைக் குவித்துத் தன்னை நிரூபணம் செய்துகொண்ட வொரெல், மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்ட வரலாற்றின் மிகமுக்கியமான ஒரு ஆளுமையென்றால் மிகையாகாது.

ஃப்ராங் வொரெல், வோல்கொட் மற்றும் வீக்ஸ் போலவே பார்படோசில் பிறந்தவர். சிறுவயது முதலே துடுப்பாட்டப்போட்டிகளில் ஈடுபாடு காட்டிவந்தார். மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக சர்வதேசப் போட்டிகளில் விளையாட ஆரம்பிக்கும் முன்னரே, உள்ளூர் முதற்தரப் போட்டிகளில் இரண்டுமுறை 500 ஓட்டங்களுக்கு மேலான இணைப்பாட்டங்களைப் பெற்றுக்கொண்ட முதலாமவர் என்கிற சாதனைக்கு உரித்துடையவர். (1943-44 இல் ஜோன் கொடார்ட்டுடன் சேர்ந்து 502 ஓட்டங்கள், 1945-46 இல் வோல்கொட்டுடன் சேர்ந்து 574 ஓட்டங்கள்). 1948 இல் இங்கிலாந்துக்கெதிரான முதலாவது 5 நாட் போட்டியில் அறிமுகமான முதற்போட்டியில் 97 ஓட்டங்களைப் பெற்று சதத்தினைத் தவறவிட்டாலும், அதற்கடுத்த போட்டியில் 131 ஓட்டங்களை ஆட்டமிழக்காமற் பெற்றார். 1950 இல் இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணிக்காக நொற்றிங்காம் மைதானத்தில் 261 ஓட்டங்களையும், லண்டன் ஓவல் மைதானத்தில் 138 ஓட்டங்களையும் பெற்றார். 539 ஓட்டங்களை இந்தத் தொடரில் குவித்து, மேற்கிந்தியத்தீவுகள் 31 என்ற கணக்கில் தொடரை வெற்றிகொள்ள வழிசமைத்தார்.

தொடர்ச்சியாக எல்லா அணிகளுக்கும் எதிராக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திவந்தார் வொரெல். கிங்க்ஸ்ரனில் இந்தியாவுக்கெதிராய் 237 (1953), இங்கிலாந்துக்கெதிராய் போர்ட்ஒஃப்ஸ்பெயினில் 167 (1954), நொட்டிங்காமில் ஆட்டமிழக்காமல் 191 (1957), ப்றிட்ஜ்ரவுணில் ஆட்டமிழக்காமல் 197 (1960) ஆகிய சதங்களைக் குறிப்பிடலாம். துடுப்பாட்டத்தில் மட்டுமல்லாமல், ஒரு பகுதிநேரப் பந்து வீச்சாளராகவும் செயற்பட்ட வொரெல், இங்கிலாந்துக்கெதிராக 1957 ஆம் வருடம் ஒரு முறை ஏழு இலக்குகளைச் சாய்த்துமிருக்கிறார். இவ்வாறாக சிறந்ததொரு துடுப்பாட்ட வீரராகாவும், பகுதிநேரப் பந்துவீச்சாளராகவும் இருந்த வொரெல் மேற்கிந்தியத்தீவுகளின் துடுப்பாட்ட வராலாற்றில் முக்கியமானவராகக் கருதப்படுவது இன்னொரு காரணத்துக்காக.

ஃப்ராங் வொரெல்தான் மேற்கிந்தியத் தீவுகள் துடுப்பாட்ட அணியின் முதலாவது கறுப்பினத் தலைவர். 196061 இல் அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்ட மேற்கிந்தியத்தீவுகள் அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட வொரெல், அவுஸ்திரேலியாவின் தலைவர் ரிச்சி பெனோவுடன் சேர்ந்து அந்தத் தொடரை இரசிகர்களின் மனம்நிறைந்த தொடராக ஆக்கினார். இரு தலைவர்களும் வெற்றியை நோக்கி, ஆனால் விதிகளுக்குட்பட ஆடுவதற்குத் தமது வீரர்களைப் பணித்தார்கள். இந்தத் தொடரிற்றான் 5நாட் போட்டிகளின் வரலாற்றின் சமநிலையில் (Tie) முடிந்த முதற்போட்டி இடம்பெற்றது. மேற்கிந்தியத் தீவுகள் 21 என்ற வகையில் தொடரைத் தோற்றிருந்தாலும், அவுஸ்திரேலிய மக்கள் வீதியோரங்களில் திரண்டு நின்று அவர்களை வழியனுப்பியது, அவர்களின் விளையாட்டின் கனவான் தன்மையையும், கவர்ச்சியையும் பறைசாற்றிய நிகழ்வாகும்.

வொரெல் ஒரு கனவான் துடுப்பாட்ட வீரர் மட்டுமல்ல, அரசியல்ரீதியான பிரக்ஞையும், விதிகளைப் பேணுகிற தன்மையும், கட்டுக்கோப்பான அணித்தலமைத்துவப் பண்பும், மனிதாபிமானமும் மிக்கவர். அவர் அணித்தலைவராகமுன்னர் ஜமேய்க்கர்களாகவும், பார்படியர்களாகவும், ட்ரினிடாடியர்களாகவும் பிரிந்துகிடந்த அணிவீரர்கள், அவரின் கீழ் "மேற்கிந்தியத் தீவுகள்" அணியாகினர். நடுவரின் தீர்ப்பை ஏற்றுக்கொள்ளல், ஆட்டமிழந்து விட்டோமென்று தெரிந்தால் தாமாக வெளியேறுதல், சகவீரர்களையும், எதிராளிகளையும் மதித்தல் ஆகியவ நற்பண்புகளைத் தனது அணி வீரர்களிடம் நிலைபெறச் செய்தார். பிரபலமானவீரரான காரிசோபர்ஸ் ஒரு போட்டியில் நடுவரின் தீர்ப்பை மதிக்காமையைச் சுட்டிக்காட்டி அவரைத் திருத்தினார். சார்ளி க்ரிஃபித்தின் எகிறுபந்தால் தலையில் காயமடைந்த இந்திய அணித்தலைவர் நாரி கொண்ட்ராக்ரருக்குக் கொடுக்கப்பட்ட முதற்துளி இரத்தம் வொரெலுடையது.

வெளிப்படையாக அரசியல் பேசிய வொரெல் அதன்காரணமாகச் சில பகைகளைச் சேர்த்துக்கொண்டாலும், எல்லோராலும் மிகவும் மதிக்கப்பட்டார். 1963 இல் இங்கிலாந்தை இங்கிலாந்தில் வைத்து 31 என்ற கணக்கில் தோற்கடித்த பின்னர் சர்வதேசப் போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றார். 51 போட்டிகளில், 9 சதங்களடங்கலாக 49.48 என்கிற சராசரியோடு 3860 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட வொரெல், 69 இலக்குகளையும் வீழ்த்தியிருந்தார். 1967-ம் வருடம், இரத்தப் புற்றுநோய் காரணமாக உயிர்நீத்த வொரெல் அவர்கள் 1964-ல் சேர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தார். இன்றும் அவுஸ்திரேலியாமேற்கிந்தியத் தீவுகள் 5நாட் போட்டித்தொடர்கள் சேர். ஃப்ராங் வொரெல் ஞாபகார்த்தக் கோப்பை என்றே அழைக்கப்படுகின்றன. அவரது சடுதியான மரணம் துடுப்பாட்ட உலகுக்கு மட்டுமல்ல, கரீபியன் தீவுகளுக்கே ஒரு பேரிழப்பாக அமைந்தது.

– கிருத்திகன்

(இதழ் 50 இல் தொடரும்)



கிளார்க் கிளப்பிய புயல்

அவுஸ்திரேலிய கிரிக்கெட்டை ஆடவைத்துள்ளது முன்னாள் கப்டன் மைக்கல் கிளார்க் எழுதிய வாழ்க்கை சரிதை புத்தகம். 'மை ஸ்டோரி' என்ற அவரது சரிதை புத்தகத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட்டின் போக்கு பற்றிய வெளிப்படையான விமர்சனங்கள் உள்ளன. இது அவுஸ்திரேலியாவில் பரபரப்பை கிளப்பியுள்ளது.

கிளார்க்கின் முக்கிய குற்றச்சாட்டு, அணியில் கப்டனின் அதிகாரம் இல்லாமல் போய் பயிற்சியாளர் மற்றும் அணி நிர்வாகமே அணியை நடத்துகிறார்கள் என ஆதங்கம் தெரிவித்துள்ளார்.

டரன் லீமன் தனக்கு மிகவும் பிடித்தவர் என்று கூறியுள்ள மைக்கல் கிளார்க், தான் பொதுவாக தற்போது இருக்கும் அமைப்பு முறையைத்தான் நான் விமர்சிக்கிறேன் என்று தெரிவித்துள்ளார். 2013 ஆஷஸ் தொடரின் போது மிக்கி ஆர்தரிடமிருந்து டரன் லீமன் பயிற்சியாளர் பொறுப்பை பெற்றார், அப்போதிலிருந்து கப்டன்சி தொடர்பாக தனக்கு அதுவரை இருந்த சில அதிகாரங்கள் பறிக்கப்பட்டது என்கிறார் கிளார்க். ஆனால் அணித்தேர்விலிருந்து தான் விலகியது தன் சொந்த முடிவே என்றும் நேர்மையாகப் பதிவு செய்துள்ளார் கிளார்க்.

2014 சிம்பாப்வேவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ஸ்டீவ் ஸ்மித் அணியில் இடம்பெற வேண்டும் என்று கப்டனாகத் தான் கோரியதை பயிற்சியாளரும், அணித் தேர்வுக்குழுவும் நிராகரித்ததை சுட்டிக் காட்டியுள்ளார் மைக்கல் கிளார்க்.

"நடைமுறையில் சில அதிரடி மாற்றங்களை நான் தாமதமாகவே ஏற்று கொண்டேன். அணி திறன் மதிப்பீட்டாளர் பாட் ஹோவர்ட் ரக்பியிலிருந்து வந்தவர், அங்கு பயிற்சியாளர்தான் எல்லாம். அதனால் அவருக்கு பிரச்சினை தெரியவில்லை. ரக்பியில்களத்தில் கப்டன் தான் பாஸ், களத்திற்கு வெளியே பயிற்சியாளர் பாஸ். ஆனால் கிரிக்கெட்டை நான் அவ்வாறாகப் பார்க்கவில்லை.

கிரிக்கெட் கால்பந்து அல்ல, பயிறிசியாளர் ஆட்டி வைக்கும் விதத்தில் இங்கு ஆட முடியாது. எனக்கு பொறுப்பு இருக்கிறது எனவே எனக்கு ஒரு முடிவு குறித்த காரண காரியங்கள் அவசியமானது.

இயன் சப்பல் என்னிடம் அடிக்கடி கூறுவார், வெற்றிதோல்வி கணக்கு உன்பெயரில்தான் இருக்கும் என்று. கப்டனிடமிருந்து மில்லியன் விஷயங்களை அவர்கள் எடுத்து விடுகின்றனர். அதாவது அப்போதுதான் நான் களத்தில் கவனம் செலுத்த முடியும். சரி! ஆனால் எனக்கு அந்த விஷயங்கள் தேவை எனும்போது எப்படி என்னை அதிலிருந்து விலக்க முடியும்? எல்லைக்கோட்டுடன் கப்டன் பணி முடிந்து விடுவதில்லை. களத்திற்கு வெளியே நான் செயலாற்றும் விதமும் களத்தில் பிரதிபலிக்குமே. என்னுடைய வருத்தங்கள் எந்த ஒரு தனிநபருக்கு எதிராகவும் கிடையாது, எனக்கு டரன் லீமனை மிகவும் பிடிக்கும். ஆனால் மிக்கி ஆர்தர் என்னைக் கேட்காமல் முடிவுகளை எடுக்க மாட்டார். இதுதான் நான் பழகிய விதம். ஆனால் இப்போது வித்தியாசமாக உள்ளது. இன்னும் கூட என்னால் மாற்றங்களை ஏற்றுக் கொள்ள கடினமாகவே உள்ளது" என்கிறார் கிளார்க்.

இந்தசரிதைபுத்தகவெளியீட்டின் முன்னர் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில், அவுஸ்திரேலிய அணியிலிருந்து புற்றுநோய் குழுவில் வட்சனும் அங்கமாக இருந்தார் என கூறி பரபரப்பை கிளப்பியிருந்தது குறிப்பிடத்தக்கது.



கார் டிரைவர் கோவிந்தன் இறுதி ஊர்வலத்தில் முதல்வர் எம்.ஜி.ஆர். நடந்து செல்கிறார்.



அரசு விழா ஒன்றில் பெண்களுக்கு முதல்வர் எம்.ஜி.ஆர். உதவிகள் வழங்குகிறார்.

எம்.ஜி.ஆர்

100

நெடுந்தொடர் 27

மனிதரை மனிதராக மதிப்பவர்!

எம்.ஜி.ஆர். மனிதரை மனிதராக மதித்து நேசிப்பாரே தவிர, அவரது வாழ்க்கைத்தரம் என்ன? எந்த பதவியில் இருக்கிறார்? என்றெல்லாம் பார்த்து மரியாதை செய்ய மாட்டார். முக்தா சீனிவாசன் ஒருமுறை கூறியது போல, முதல்நாள் எம்.ஜி.ஆரின் காரில் ராஜீவ் காந்தியை பார்க்கலாம்; அடுத்தநாள் அதே காரில் ஒரு லைட்பாய் எம்.ஜி.ஆருடன் சென்று கொண்டிருப்பார். கடைநிலை ஊழியராக இருந்தால்கூட, அவர்களின் உழைப்புக்கும் திறமைக்கும் எம்.ஜி.ஆர் மரியாதை அளிப்பார்.

எம்.ஜி.ஆரின் கார் டிரைவராக இருந்தவர் கோவிந்தன். மிகத் திறமையான டிரைவர். எந்த கூட்டத்திலும் சாமர்த்தியமாக காரை ஓட்டிச் செல்லும் திறன் கொண்டவர். எம்.ஜி.ஆருக்கு கோவிந்தனின் டிரைவிங் பிடிக்கும். 1976ம் ஆண்டு எம்.ஜி.ஆரிடம் டிரைவராக பணிக்கு சேர்ந்தார் கோவிந்தன். சென்னை லாயிட்ஸ் சாலையில் எம்.ஜி.ஆர் வசித்து வந்தபோது அங்கு காவலாளியாக பணியாற்றி, எம்.ஜி.ஆரின் நம்பிக்கைக்கு பாத்திரமானவராக விளங்கிய தாமோதரனின் மருமகன்தான் கோவிந்தன். பல ஆண்டுகளாக டூரிஸ்ட் கார் ஓட்டி வந்தவர். தாமோதரனின் சிபாரிசின் பேரில் கோவிந்தனை டிரைவராக பணிக்கு சேர்த்துக் கொண்டார் எம்.ஜி.ஆர்.

1977ம் ஆண்டு எம்.ஜி.ஆர் முதல்வராகி விட்டார். அவர் தினமும் ராமாவரம் தோட்ட வீட்டில் இருந்து கோட்டைக்கு செல்லும்போது டிரைவர் கோவிந்தன் தான் காரை ஓட்டிக் கொண்டு செல்வார். முதல்வரின் டிரைவர் என்பதால் பணிக்கு தினமும் கோவிந்தனை அவரது வீட்டுக்கு வந்து போலீஸ் ஜீப்பில் அழைத்துக் கொண்டு எம்.ஜி.ஆர் வீட்டுக்கு செல்வார்கள். மாலையில் பணி முடிந்ததும் மீண்டும் வீட்டில் கொண்டுவிட்டு செல்வார்கள்.

ஒருநாள் பணிக்காக வீட்டில் இருந்து போலீஸ் ஜீப்பில் வரும்போது, சென்னை கத்திபாரா சந்திப்பு அருகே ஜீப் மீது எதிரே வந்த பெரிய லாரி மோதியது. போலீஸ் ஜீப் டிரைவர் பலத்த காயங்களோடு அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்தார். டிரைவர் கோவிந்தன் சம்பவ இடத்திலேயே பலியானார். அவர் இறந்த செய்தி வயர்லெஸ் மூலம் எம்.ஜி.ஆருக்கு உடனே தெரிவிக்கப்பட்டது. எம்.ஜி.ஆர் அதிர்ச்சி அடைந்தார். கோவிந்தனின் உடலை பிரேத பரிசோதனை செய்ய அவரது குடும்பத்தில் யாருக்கும் விருப்பம் இல்லை. பிரேத பரிசோதனை வேண்டாம் என்று அவரது உறவினர்கள் கேட்டுக் கொண்டபோதும், சட்டப்படி கோவிந்தனின் உடலை பிரேத பரிசோதனை செய்ய வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் பிடிவாதமாக இருந்தார். அதன்படி, பிரேத பரிசோதனை நடந்தது.

பின்னர், கோவிந்தனின் உடல் அவரது வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டு சில மணி நேரம் வைக்கப்பட்டு, அங்கிருந்து அதிமுக தலைமை அலுவலகத்துக்கு கொண்டு வரப்பட்டு அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. அமைச்சர்களும் அதிமுக நிர்வாகிகளும் அஞ்சலி செலுத்தினர். அதன் பிறகு ஒரு வேனில் கோவிந்தனின் உடல் ஏற்றப்பட்டு கிருஷ்ணாம்பேட்டை சுடுகாட்டுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இங்கே ஒரு முக்கியமான விஷயம். அந்த இறுதி ஊர்வலத்தில் முதல்வர் எம்.ஜி.ஆர் நடந்தே சென்றார். முக்கிய பிரமுகர்கள் பலரின் இறுதி ஊர்வலத்தில் எம்.ஜி.ஆர் நடந்து சென்றிருக்கிறார். இருந்தாலும், தன்னிடம் பணியாற்றிய டிரைவரின் இறுதி ஊர்வலத்தில் நடந்து செல்லாமல், அஞ்சலி மட்டும் செலுத்தி விட்டு சென்றிருந்தால் அவரை யார் கேட்க முடியும்? ஆனால், இறந்து போன தனது ஊழியருக்காக அவரது இறுதி ஊர்வலத்தில் ஒரு மாநிலத்தின் முதல்வர் நடந்து சென்றார் என்றால் அது எம்.ஜி.ஆராகத்தான் இருக்க முடியும்.

கோவிந்தனின் குடும்பத்தினரை அழைத்து பண உதவி செய்ததுடன், கோவிந்தன் பெயரில் இருந்த இன்சூரன்ஸ் பணம் விரைவில் கிடைக்க ஏற்பாடுகளும் செய்தார். தாங்கள் வேண்டாம் என்று மறுத்தும் கோவிந்தனின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்பட வேண்டும் என்பதில் எம்.ஜி.ஆர் ஏன் பிடிவாதமாக இருந்தார் என்பது அப்போதுதான் கோவிந்தன் குடும்பத்தாருக்கே தெரிந்தது. விபத்தில் மரணம் ஏற்பட்டால் பிரேத பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பித்தால்தான் இன்சூரன்ஸ் தொகையைக் கோர முடியும். கோவிந்தனின் மனைவிக்கு கருணை அடிப்படையில் வீட்டு வசதி வாரியத்தில் பணி வழங்கியும் எம்.ஜி.ஆர் உத்தரவிட்டார்.

கோவிந்தன் இறந்த துயரத்தையும் மீறி, தங்கள் மீது எம்.ஜி.ஆர் காட்டும் அன்பையும் ஆதரவையும் கண்டு ஆனந்தக் கண்ணீருடன் அவருக்கு நன்றி தெரிவித்தது கோவிந்தனின் குடும்பம்.

எம்.ஜி.ஆர் முதல்வராக இருந்த போது சென்னை கிண்டி ரயில் நிலையம் அருகே புதிய சுரங்கப் பாதை திறக்கப்பட்டது. விழாவில் எம்.ஜி.ஆர் கலந்துகொண்டு சுரங்கப் பாதையை திறப்பார் என அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்டபடி விழாவுக்கு எம்.ஜி.ஆர் சென்றார். திறப்பு விழா நேரத்தில் சுற்றும் முற்றும் பார்த்து விட்டு உதவியாளர்களிடம் காதில் கிசுகிசுத்தார்.

அவர்கள் சென்று ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தவரை அழைத்து வந்து எம்.ஜி.ஆரிடம் நிறுத்தினர். அவர் பெயர் ஏழுமலை. எம்.ஜி.ஆரை வணங்கிவிட்டு ஏதும் புரியாமல் படபடப்புடன் நின்று கொண்டிருந்தவரின் கையில் கத்தரிக் கோலைக் கொடுத்து, சுரங்க நடைபாதை திறப்பு விழாவுக்கு அடையாளமாக ரிப்பனை வெட்டச் சொன்னார் எம்.ஜி.ஆர்!

கண்களில் நீர் மல்க ரிப்பனை வெட்டி திறந்து வைத்த ஏழுமலைதான், அந்த சுரங்கப் பாதையை கட்டிய மேஸ்திரி!

எம்.ஜி.ஆரைப் பற்றி கவிஞர் வாலி ஒருமுறை இப்படி வாழ்த்திப் பாடினார். "மனிதர்களில் எத்தனையோ நடிகர்கள் உண்டு. நடிகர்களில் நான் பார்த்த முதல் மனிதன் நீதான்!"

தொடரும்...

– ஸ்ரீதர் சுவாமிநாதன்



சிரித்து வாழ வேண்டும் படப்பிடிப்பில் குழந்தையுடன் எம்.ஜி.ஆர்.



உங்கள் குழந்தைகளும் பள்ளிக்கு செல்ல மறுக்கின்றனரா?

பிள்ளைக்கும் ஆசிரியருக்கும் நெருங்கிய தொடர் அறுந்து விடுவதால் பிள்ளை பாடசாலைக்குப் போக பயந்து அழுது அடம்பிடிக்கிறது. பிள்ளையிடம் காணப்படும் குறைகள் கோளாறுகளை ஆசிரியர் கண்டிப் புடன் தண்டிக்கும்போது ஆசிரியரின் சுபாவத் தைக்கண்டு பாடசாலைக்குப் போக அஞ்சுகிறது. பாடசாலையைப் பற்றி கதைத்தாலே பிள்ளை அஞ்சுவதற்கு இதுவே காரணம்.

எல்லாப் பிள்ளைகளும் அறிவிலும் புத்திக் கூர்மையிலும் ஒரே நிலையில் இருக்க மாட்டார்கள். ஒரு பிள்ளை புரிந்து கொள்ளும் முறையில் மற்றப் பிள்ளை புரிந்து கொள்ளாது. ஒரு பிள்ளை சரியாக புரிந்து கொள்ளும் அதேவேளை மற்றப் பிள்ளை பிழையாக விளங்கிக் கொள்ளும்.

பிள்ளைகளிடத்தில் இவ்வாறான கோளாறுகள் இருப்பதை ஆசிரியர் புரிந்து கொண்டு தான் கற்பிக்க வேண்டும். பிள்ளைகளின் மனோநிலையையும் கோளாறுகளையும் கவனிக்காமல் ஆசிரியர் பிள்ளைகளுக்கு கற்பிக்க முனைந்தால் ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருக்காது.

அப்போது ஆசிரியர் பிள்ளையிடத்தில் கடினமாகவே நடந்து கொள்ள முனைவர். பிள்ளை ஆசிரியரை விட்டு விலகி பாடசாலையை விட்டு தூரமாகவே விரும்பும். நாளடைவில் அதுவே ஒரு அச்ச நோயாக மாறும். அதைத்தான் பாடசாலை அச்சநோய் எனக் குறிப்பிடப்படுகிறது.

இரண்டாவது தாயுடனுள்ள மிதமிஞ்சிய பிணைப்பு, அதாவது பிறந்ததிலிருந்து தாயுடைய மடியில் அரவணைப்பில் வளர்ந்து வந்த அந்தப் பிள்ளை முதன் முதலாக தாயை விட்டு பிரிந்து செல்வதாலும் பயந்து அஞ்சுகிறது. அறிமுகமற்றவர்களுடன் கலந்துறவாடுவதை பயப்படுகிறது. தாயின் அன்பும் பாசமும் கிடைக்காமல் போகுமோ என்று அஞ்சுகிறது.

அதுபோல் பெற்றோரின் பிரச்சினை அல்லது விவகாரத்தின் காரணத்தால் பெற்றோர் பிரிந்திருக்கும்போது அதனால் தாயுடைய தந்தையுடைய பாச பிணைப்பு கிடைக்காமல் தவிர்க்கும்போது பிள்ளை உளரீதியாக பாதிப்படைந்து விடுகிறது. அதன் காரணமாகவும் தாயைவிட்டு பிரிந்து செல்ல அஞ்சுகிறது.

ஆண்கள் அழகாக மாற இப்படி செய்யுங்கள்



ஆண்கள் பொதுவாகத் தலையில் எண்ணெய் தேய்ப்பது கிடையாது. பொடுகு அதிகரிக்க இதுவும் ஒரு காரணம். சூடான உடலைக்கொண்டவர்கள், தலைக்கு நல்லெண்ணெய், விளக்கெண்ணெய் பயன்படுத்தலாம். குளிர்ச்சியான உடல்வாகு கொண்டவர்கள், தேங்காய் எண்ணெய் பயன்படுத்தலாம்.

இரவு படுக்கைக்குச் செல்லும் முன்னர், தலைக்கு எண்ணெய் தேய்த்து விட்டு காலையில் தலைக்குக் குளிக்கலாம். பொடுகுப் பிரச்னை உள்ளவர்கள் தலையில் எண்ணெய் வைக்கக் கூடாது.

மன அழுத்தம், தலைக்கு எண்ணெய் தேய்க்காதது, சரிவிகித உணவு உண்ணாமை, தூக்கமின்மை போன்ற காரணங்களால், இளம் வயதிலேயே முடி கொட்ட ஆரம்பிக்கும். விற்றமின் சி அதிகம் உள்ள பழங்கள் மற்றும் பாதாம் பருப்பு ஆகியவற்றைச் சாப்பிட்டுவந்தால் நன்றாக முடி வளரும். ஹேர் ஸ்டரெயிட்டனிங், ஹேர் கலரிங் போன்றவை செயற்கையான அழகு மட்டுமே. இதனால் பக்க விளைவுகள் ஏற்படலாம். ஊட்டச்சத்து நிறைந்த உணவு உட்கொண்டு, முறையாகத் தூங்கி எழுந்தாலே நன்றாக முடி வளரும்.

தலையில் எண்ணெய் வைக்காதது, ஒழுங்காகத் தண்ணீர் குடிக்காதது போன்ற காரணங்களால் சிலருக்குக் குதிகால் வெடிப்பு ஏற்படலாம். எனவே நன்றாகத் தண்ணீர் குடிக்க வேண்டும். வாரம் ஒருமுறை வாளியில் சுடு தண்ணீர் நிரப்பி, அதில் எலுமிச்சைச்சாறு மற்றும் கல் உப்பு சேர்த்து, பாதங்களை 15 நிமிடங்கள் ஊறவைத்து எடுத்தால்வெடிப்பு குறையும்.

காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கடுமையான வெயில் இருக்கும். அந்த நேரத்தில் பைக் ஓட்டுபவர்கள் முகத்துக்கும் கைகளுக்கும் சன் ஸ்க்ரீன் லோஷன் தடவிக்கொள்ள வேண்டும். எண்ணெய் சருமம்கொண்டவர்கள் சன் ஸ்க்ரீன் பயன்படுத்தக் கூடாது. ஸ்லிப்பர் போடுபவர்கள், பாதங்களிலும் சன் ஸ்கிரீன் பயன்படுத்த வேண்டும். பேஷியல் செய்வதால், முகத்தில் உள்ள அழுக்குகள் படிப்படியாக நீக்கப்பட்டு, கரும் புள்ளிகள் நீக்கப்படும். நீராவி பிடிப்பதால் முகம் புத்துணர்ச்சி அடைவதோடு பிரகாசமாகவும் இருக்கும். முகத்தைச் சுத்தப்படுத்தவே ஃபேஷியல்.

அதிகளவு தண்ணீர் குடிப்பது உதடு வறண்டு போகாமல் பாதுகாக்கும். பொதுவாகவே, தண்ணீர் அதிகம் எடுத்துக்கொள்வது சருமத்தைப் பொலிவாக்கும். பழங்கள் அதிகம் சாப்பிடுவது, உதட்டை அழகாக்கும். இரவு நேரத்தில் உதட்டில் வெண்ணை தடவிவிட்டுப் படுக்கலாம். பாதாம் எண்ணெய், ஒலிவ் எண்ணெய் ஆகியவற்றை உதட்டுக்குத் தடவுதவன் மூலம், உதடு கருமையாகமல் தடுக்க முடியும்.

DEEPAM .news
தீபம்
கனடாப் பதிப்பு
26.10.2016

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மீதான தாக்குதல் ஒரு கலவர நிலையை உருவாக்குவதற்கானதிட்டமிட்ட நடவடிக்கையா?

ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியை மேற்கோள்காட்டி கேள்வி எழுப்புகிறது லங்கா ஈ நியூஸ்!



யாழ் பல்கலைக் கழக மாணவர்களான விஜயகுமார் சுலக்ஷன், நடராஜா கஜன் ஆகியோர் கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டமையும், அதைத் தொடர்ந்து, இரண்டு இரகசிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது வாள் வெட்டு நடாத்தப்பட்டதுவும், திட்டமிட்ட வகையிலான நடவடிக்கையாக இருக்க முடியும் என்று எழுதுகிறது லங்கா ஈ நியூஸ் இணையப் பத்திரிகை. முன்னைய அரசாங்கத்தால் கடத்திச் செல்லப்பட்டு இன்றுவரை உயிருடன் உள்ளாரா இல்லையா என்பது தெரியாமலிருக்கும் ஊடகவியலாளரும் சிறந்த கேலிச்சித்திரக் காரருமான எக்னலியகொட அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இணைய பத்திரிகைதான் லங்கா ஈ நியூஸ்.. இந்தக் கொலை தொடர்பாக அது, தங்களுடன் தொடர்பாயுள்ள, வடக்கில் கடமையாற்றிய பொலிஸ் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி இந்தக் கேள்விகளை எழுப்பி யுள்ளது.

"1983க்குப் பிறகு பொலிசாரால் யாழ்ப்பானத்தில் சிவிலியன்கள் மீது நடாத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இது. (இந்த தகவல் தவறு 1984க்குப் பிறகு என்று சொல்வதே சரியாக இருக்கும். சுன்னாகப் பொலிஸ் நிலையப் படுகொலை, பருத்தித்துறைப் படுகொலைகள் இரண்டிலும் மொத்தமாக 26 பேர் கொல்லப்பட்ட சம்பவங்கள் 1984 இல் நடைபெற்றன தீபம்) யுத்த காலத்தில்,கூட, இராணுவத்தினரால் பொதுமக்கள் தாக்கப்பட்டுள்ளார்களே ஒழிய பொலிசாரால் தாக்கப்படடதில்லை. அப்படியிருக்க, நிறுத்தச் சொன்னதைக் கேட்காமல், வாகனத்தை நிறுத்தாமல் ஓட்டியதற்காகவே துப்பாக்கிப் பிரயோகம் செய்தோம் என்பது சந்தேகத்துக் குரியதும், முழுக்க முழுக்க ஒருவகைச் சதி நோக்கத்துடன் செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும் என தான் கருதுவதாக அந்த அதிகாரி தெரிவித்திருக்கிறார்" .

"வழமையாக இவ்வாறு நிறுத்தாமல் வாகனம் ஓட்டுபவர்களை, அவர்களது வாகன பதிவு இலக்கத்தை வைத்து வாகன உரிமையாளர் பற்றிய தகவலைக் கண்டு பிடிப்பதுவே நடை முறையில் இருக்கிறது. அதுவும் இன்றைய தொலைத்தொடர்பு வசதிகளின் காரணமாக, ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே முழு விபரங்களையும் பெற்றுவிட முடியும். அதற்காக துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டிய அவசியம் இல்லை. தவிரவும், முக்கியமாக அவசரகால நிலை அமுலில் இல்லாத போது, ஒரு பொலிஸ்காரருக்கு ரி 56 ரக துப்பாக்கியால் சுட எந்த அதிகாரமும் இல்லை. அப்படி சுடுவதற்குரிய தேவை இருந்தாலும், அதற்கான முன்னனுமதியை பெற்றிராமல் அவர் அப்படிச் சுட முடியாது. இதைவிட முக்கியமான விடயம் என்னவெண்றால், இன்றைய பாதுகாப்புச் செயலாலர், (இவர் முன்னிய ஜனாதிபதி மகிந்தவுக்கு விசுவாசமான ஒருவர் என சந்தேகிக்கப்படும் ஒருவர்) துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் அடங்க முன்னரே, இதற்கும் பொலிசுக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை என்று தெரிவித்திருப்பது, இந்தச் சதி நோக்கத்தை மேலும் வலுப் படுத்தப்படுகிறது"

"அந்தப் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவிக்கையில், கொழும்பிலிருக்கும் சட்டம் தொடர்பான பகுதிக்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரான அஜித் ரோஹனவின் (இவரும் இன்னொரு ராஜபக்ஷ எடுபிடி தான்) அறிவுறுத்தலின் பேரில். இந்தச் சூட்டுச் சம்பவம் வெறும் வீதி விபத்தாக முறைப்பாட்டுப் புத்தகத்தில் பதியப்பட்டது. ஆனால், அதன் பிறகு வெளியான தகவல்களால், நிலமைகள் மோசமாக திரும்புவதைக் கண்டதும், அந்தப் பதிவுகள், மூன்று பதிவேடுகளிலுமிருந்தும் மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டன."

"இந்த நிலையில் தான் கடந்த ஞாயிற்றுக் கிழமையன்று சிவிலில் இருந்த இரண்டு பொலிஸ் புலனாய்வுப்பிரிவு பொலிஸ் காரர்கல் மோட்டார் சயிக்கிளில் போகும் போது சுண்ணாகத்தில் வைத்து வாள் வெட்டுக்கு இலக்காகியுள்ளனர். இது ஒரு உள்வீட்டு தகராறு என்றே நான் கருது கிறேன். வாளால் வெட்ட வந்தவர்கள், இலக்கத் தகடில்லாத மூன்று மோட்டார் சயிக்கிளில் வந்து, தாக்கிவிட்டு ஓடிவிட் டார்கள். இந்த நடவடிக்கை, ராஜபக்ஷவுக்கு சார்பான இராணுவ உளவுப்பிரிவின் உறுப்பி னர்கள், பல்கலைக் கழக மாணவர்களின் பழிவாங்கலே இது எனக் காட்டி இனவெறித் தாக்குதலை உருவாக்க எடுத்த ஒரு நடவடிக்கைதான்.கொல்லப்பட்ட மாணவனின் வீட்டிலிருந்து 1 மைல் தூரத்தில் தான் இந்த சம்பவம் நடந்திருக்கிறது. தாக்கப்பட்ட நவரத்ன, ஹேரத் ஆகியோரை யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் சிவில் உடையில் அலைபவர்கள். இரகசியப் பொலிசார். தவிரவும், தாக்குதல் நடந்த இடத்தில் எந்த சிவிலியனும்,இலக்கத் தகடில்லாத மோட்டார் சயிக்கிளில் திரிவதில்லை. ஆகவே இது திட்டமிட்டு அதே ராஜபக்ஷ சார்புக் குழுக்களிடையே நடந்த, மீண்டும் ஒரு யுத்த சூழலை உருவாக்க செய்யப்படும் சதி நடவடிக்கையே." என்று அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்

இவ்வாறு அந்தப் பத்திரிகை எழுதியுள்ளது.

இதேவேளை யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் பெருந்திரளாக திரண்டு நின்று கச்சேரியை முற்றுகையிட்டு நடாத்திய ஆர்ப்பாட்டத்தின் பின் கொல்லப்பட்ட தமது நண்பர்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை அரசாங்க அதிபரிடம் கயளித்துள்ளனர். தமது இந்தக் கோரிக்ககளுக்கு உரிய பதில் கிடைக்கும் வரை பல்கலைக்கழகத்தில் கற்றல் செயற்பாடுகள் நடைபெறாது என மாணவர் அமைப்பு தெரிவித்துள்ளது.